சாயி மார்க்கம்

செப்டம்பர் - டிசம்பர் 2020



இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின்

தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரேவி வெள்ள அனர்த்த சேவை - யாழ்ப்பாணம் - வடபிராந்தியம்

புரேவி வெள்ள அனர்த்த சேவை - திருமால்புரம்- பருத்தித்துறை - வடபிராந்தியம்



95 அவதாரதினத்தையொட்டி 95 அன்பு பொதி வழங்கல் - வீரமனை - கிழக்குப் பிராந்தியம்

மன்னாரில் மரநடுகை - வடபிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

சாயி மார்க்கம்
Sai Markam

மலர்: 27
இதழ்: 65

செப்டம்பர்
டிசம்பர்
2020

உள்ளே.....

- விழிப்புடனிருத்தல் 2
- ஜெய சாயி குருதேவா 4
- தென் அமெரிக்காவில் சுவாமியின் செயற்பாடுகள் 6
- சத்திய சாயி காயத்திரியின் மகிமை 7
- சிவபுராணம் எமது சுயபுராணம் 9
- சுவாமி சொன்ன கதை 12
- இயேசு பிரானும் சத்திய சாயி பாபாவும் 13
- ஆன்மீக கதைகள் 16
- கல்வியின் நிறைவு ஒழுக்கம் 19
- கஷ்டமான நேரங்களில் மகிழ்ச்சியாக எப்படி? 21
- நத்தார் செய்திகள் 28
- பக்தி மார்க்கத்தில் இறைவனை அடையும் 9 படிகள் 33
- தீங்கு செய்தவனையும் நேசி 34
- எவ்வாறு சோதனைளை எதிர்கொள்ளலாம் 35
- Message from Sri. R.J.Ratnakar 37
- புதுவருட வாழ்த்துக்களும் செய்திகளும் 38
- நிறுவனச் செய்திகள் 40

ஆசிரியர்:
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

துணை ஆசிரியர்கள்:
திரு.S.R. சரவணபவன்
தொ.பே - 021 222 5442

திரு.க.கனகரத்தினம்
தொ.பே - 021222 2323

இலங்கையில் தனிப்பிரதி ரூபா 50.00
வருடச் சந்தா ரூபா 250.00

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
166/5, சேர்.பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

சாயி மார்க்கம் புதிய கணக்கு இலக்கம்
காசோலை:
Sathiya Sai International Organization – Northern Region
A/C No: 86002792
SWIFT CODE: BCEYLKLXXXX
Bank of Ceylon - Thirunelvely,
Jaffna, Sri Lanka.

ஒரே ஒரு மதம் அது அன்பென்னும் மதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய தலையங்கம்

விழிப்புடனிருத்தல் (Mindfulness)



எமது வாழ்வில் தேகத்தில், மனதில் எண்ணற்ற நிகழ்வுகள் தன்னியக்கமாக நினைவற்ற நிலையில் நிகழ்கின்றன. உதாரணமாக நாம் ஒன்றும் நினைக்காமலேயே, சுவாசம், இதயத்துடிப்பு, கலங்களில் அனுஷேபம் மனக்குமுறல்கள் நிகழ்கின்றன. இதனால் வாழ்க்கையில் துன்பம், கலக்கம், பதட்டம் மனத்தளம்பல் ஏற்படுகின்றன.

புத்தபெருமான் மனிதனின் துன்பத்தை எவ்வாறு நீக்கலாம் என்று சில வருடங்கள் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்து ஞான நிலையடைந்து இதற்கான முடிவைக் கண்டார். அவர் பிறப்புடனேயே துன்பமும் ஏற்படுகின்றது. இதற்குக் காரணம் பற்று அல்லது ஆசையே என்றும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு பற்றின்மையே வழி என்றும் கூறி, பற்றின்மையை அடைவதற்கு எட்டு வழிமுறைகளையும் போதித்துள்ளார். இந்த எட்டுக் கோட்பாடுகளுள் மனதின் செயற்பாட்டைத் தெளிவாக விளங்கிக் கொண்டும் அதை அடைவதற்கு விழிப்புடனிருத்தல் அவசியம் என்றும் போதித்துள்ளார். இக் கோட்பாடுகள் மேலைநாட்டு மனநல நிபுணர்களிலும் மனநோய் வைத்தியர்களிலும் நரம்பியல் விஞ்ஞானிகளிலும் பெரும் ஆர்வத்தை உண்டாக்கியது. ஆர்வம் ஆராய்ச்சியைத் தூண்டியது. ஆராய்ச்சியில் இக் கோட்பாடுகளின் நன்மைகள் வெளிவந்தன. அத்துடன் இங்கு சமயமோ அல்லது கடவுள் வழிபாடோ கலந்திருக்கவில்லை. ஏழாவது கோட்பாடான mindfulness ஐப் பல்கலைக்கழகங்கள் பாட விதானத்திலேயே உள்ளடக்கியுள்ளன. ஆகவே இதைப்பற்றிச் சிந்திப்போமாக.

Mindfulness என்ற ஆங்கிலப் பதம், புத்த தர்மத்திலுள்ள "சாத்தி" என்ற பாளி மொழிப் பதத்தின் மொழிபெயர்ப்பேயாகும். இப் பதத்திற்கு தமிழ்மொழியில் விழிப்புடனிருத்தல், நினைவாற்றல், நெறிகள், மனநிறைவுக் கவனம் என்ற பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன..

மனநிறைவுக் கவனம் என்றால் நிகழ்காலத்தில் ஒரு தீர்ப்பளிப்புமின்றி மிகவும் அன்பு கலந்த இதயத்துடன் எமது தேகச் செயல்களையும் எண்ணம், உணர்வு, சொல், மனச்சிதறல்களையும் உன்னிப்பாகக் கவனிப்பதையே குறிக்கின்றது.

சாதாரண மனதைக் கவனிக்க உயர் மனம் என்ற ஒன்று செயற்படவேண்டும். உயர்மனதை, புத்தி, உயர்அறிமனம், மனச்சாட்சி என்ற பதங்களால் குறிக்கின்றோம். மனநிறைவுக் கவனம், விழிப்பூட்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அப்பியாசம் மூலமே விருத்தி செய்யலாம். உணர்ச்சி வசப்பட்டு உடனடியாகச் சொல் செயலில் இறங்குவதைவிட்டு, சில வினாடிகள் ஏன், எது, எங்கே, எதற்கு என்று ஆராய்ந்துவிட்டே இறங்க வேண்டும். இதைவிருத்தி செய்வதற்கு மனதைப் பரந்த உணர் விலிருந்து (General Awareness) ஒருமுகப்படுத்தி (Concentration) ஆழ்ந்த சிந்தனைக்குட்படுத்தி (Contemplation) தியானத்தில் நிலைக்கச் செய்ய வேண்டும்.

புத்த தர்மத்தின்படி தியானம் சமாத்தா, விபாசன என்று இருவகைப்படும். விபாசன முறை மனநிறைவுக் கவனத்தில் பயிலப்படுகின்றது. இவ்விரண்டு முறைகளிலும் சுவாசக் கவனிப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன்மூலம் அலையும் மனதையும் எண்ணங்கள் எழுச்சியையும் கட்டுப்படுத்தலாம். இவ்விரண்டு முறையிலுள்ள வித்தியாசத்தைக் கவனிப் போமாக,

சமாத்தா முறையில் மனதைத் தெரிந்தெடுத்த ஒரு பொருளில் ஒருமுகப்படுத்தி ஆழமான சிந்தனைக்கு உட்படுத்திக் கடைசியாகத் தியானம்மூலம் சமாதி நிலையை அடைவதேயாகும். கடைசிநிலையில் தியானிக்கும் பொருள், தியானம் செய்பவர் தியானிக்கும் செயல் எல்லாம் ஒன்றாகிவிடும். இதன்மூலம் மனதில் உள்ள கிலேசங்கள் அழிந்து மனம் தூய்மையடைந்து தளம்பாத சமநிலை ஏற்படுகின்றது.

விபாசனத் தியான முறையில் உடல், மனம் ஆகியவற்றின் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். பின்பு செயற்பாடுகள் எழும்போது மனதை அதில் ஒருமுகப்படுத்த வேண்டும். இம்முறையில் தியானிப்பதற்கென்று ஒரு பொருளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தில்லை. நிகழ்காலத்தில் கவனம் வைத்து, அவ்வப்போது எழும் உடல், மனதின் செயற்பாடுகளில் மனதை ஒருமுகப்படுத்தி ஏன், எது, எதற்காக என்ற காரணத்தை விளங்கவேண்டும். கோபம், துன்பம், வலி, விறைப்பு ஏற்பட்டால் அதில் கவனத்தைச் செலுத்தவேண்டும். இம்முறையை நடந்துகொண்டும் இருந்துகொண்டும் படுத்திருந்து கொண்டும் செய்யலாம். இக்கவன முடிவில் தேகம், உணர்வுகளின், பொருட்களின் உண்மையான இயல்பை அறியலாம். அதாவது விளக்கம், புரிந்துணர்வு ஏற்படுகின்றது. தேகம் மனதின் செயற்பாடுகளைப் பற்றிய விளக்கம் ஏற்பட்டால் பற்றின்மை ஏற்படும். பற்றின்மை வலிமையடைந்தால் துன்பம் ஏற்படாது. இதுவே விபாசன தியான முறையாகும். இதுவே நோக்கமுமாகும்.

மனநிறைவு கவனமும் தியானமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றதேயாகும். தியானப் பயிற்சிமூலம் தேக, மன ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகின்றது. எமது செயற்திறன், அறிவுத்திறன், மனித உன்னதம் விருத்தியடைகின்றன.
நபரிடை உறவு, நபரிடை தொடர்பாடல் மேன்மையடைகின்றன.

சமஸ்தலோகா: சுகினோ பவந்து
ஜெய் சாயிராம்.

- ஆசிரியர்.

உசாத்துணைகள் :

- Vipasana Meditatian by Ven Sujiva
- What the Budha taught by Ven.Walpola
- Mindfulness - Kindness
  Inner sources & Freedom - Happiness
  by Jim Hopper (2008)
- Google search.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய சாய்குருதேவா

ஜெய சாயி குருதேவா சாயி குருதேவா
குரு தேவ பினா நிர்வாண நஹி ஜெய சாயி குருதேவா
துமிஹோ மாதா பிதா துமிஹோ சாயி குருதேவா
சத்யஸ்வரூபா ராகதிகாஹோ சாயி குருதேவா
குரு தேவ பினா நிர்வாணநஹி ஜெய சாயி குருதேவா

1. ஜெய சாயி குருதேவா சாயிகுருதேவா

வெற்றி கொண்ட சாயிகுருதேவனே! சாயிகுருதேவனே! என்பதுதான் இதன் நேரடிப் பொருள். சாயிதேவனுக்கு வெற்றியா? ஆம் அவர் குருவாக வந்து எம்மைத் தன்பால் ஈர்த்து அடங்காமல் அவலமாய் அவமே திரிந்த எம்மையே அவர் வெற்றி கொண்டதால் அவர் வெற்றி தேவன் தான்.

குரு -உனது மனச்சாட்சியே உனது குரு என்கிறார் நம் பாபா

மனச்சாட்சியை பின்பற்றும் போது மனம் அமைதி பெறுகிறது. அதையே சாந்தி என்கிறோம். சாந்தியே சாயி குருதேவன்.

அமைதியின் ஆழத்திலேதான் ஆனந்தம் இருக்கிறது. தேவன் என்பவன் ஆனந்தம் அடைபவன். எனவே குரு எனும் மனச்சாட்சி வழிகாட்டுதலின்படி வாழ்பவன் தேவன் ஆகிறான். உயர்ந்தவன் ஆகிறான்.

2. குரு சேவ பினா நிர்வாண நஹி, ஜெய சாயி குருதேவா...

குருவின் சேவை இல்லையேல் நமக்கு விடுதலை இல்லை. சாயிகுருதேவா. இதுநேரடிப் பொருள்.

மனதெனும் மாயவலையில் மயங்கியதால் எமக்கு அதிலிருந்து விழித்து எழுந்து உணர்ந்து உள்ளத்தால் விடுதலை பெறுவதற்கு குரு சேவையே உகந்த வழியாகும்.

ஜெகத்குரு ஆதிசங்கரரின் வாழ்வில் நடந்த ஒருசம்பவம். இங்கு பொருத்தமானதாகும். அவருக்கு நான்கு சிஷ்யர்கள் இருந்தனர். அதில் பத்மபாதர் என்பவருக்கு மட்டும் பாடங்களில் கவனம் செலுத்தமுடியவில்லை. எனினும் மற்றவர்கள் தன்னை பரிகசிப்பதை பொருட்படுத்தாமல் அவர் குருவின் சேவையிலேயே மூழ்கியிருந்தார். அதைத் தவிர அவருக்கு வேறு விடயங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. குருவின் உடைகளைத் தோய்த்து உலர்த்தி அதை குரு அணியக் கொடுப்பது அவரது குரு சேவையாகும். அதை அவர் விடாமல் தொடர்ந்து செய்து வந்தார்.

ஒருநாள் பத்மபாதர் ஆற்றின் மத்தியிலுள்ள பாறையில் துணிகளை காயவைத்து எடுத்துக் கொண்டிருந்த போது ஆறு பெருக்கெடுத்தது. அதேவேளை ஏனையோருக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆதிசங்கரரும் ஆற்றின் கரையிலிருந்த வண்ணம் பத்மபாதரைக் கூவியழைத்தார்.

குருவின் குரலைக் கேட்ட மாத்திரத்தில் பத்மபாதர் ஆறு பொங்கி ஓடுவதைக் கருத்தில் கொள்ளாது ஆற்றின் மீது துவைத்த துணிகள் நனைந்து விடக்கூடாதே என்று தலையில் சுமந்த வண்ணம் ஆற்றில் நடக்கத் தொடங்கினார். குருவின் சேவையில் குறியாக இருந்ததினால் குறுக்கே பொங்கிப் பெருகும் ஆறும் அவரின் ஆர்வத்தின் முன் அடங்கிப் போனது. அவர் பாதம் வைத்த ஒவ்வொரு அடிக்கும் தாமரைப் பூக்கள் அவரது பாதத்தைத் தாங்கி கரை சேர்த்ததை அறியாமல் அவர் குருவிடம் ஓடிவந்தார். இதைக் கண்ட ஏனைய சீடர்கள் ஆச்சரியமடைந்தனர்.

ஆதிசங்கரரோ அவரின் ஒருமுனைப்பான சேவையின் உணர்வை உயர்வை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தி அவருக்கு அக்கணமே உயர்ந்த தவஞானமும் தெய்வீகமும் மலர ஆசீர்வதித்தார். பின்னர் தமது பஜகோவிந்தத்தில் 31 ஆவது சுலோகத்தில் "குருவின் பாதகமலத்தில் குறையா பக்தி வைப்பாயேல் பிறவிச் சிறையில் நின்று துரிதமாக மீள்வது உறுதி. புலனும் மனமும் ஒழுங்குபட்டால் உலகத்தைஆளும் தேவனுடைய ஒளிமய உருவத்தை காண்பாய் உன் உள்ளத்திலேயே" என்று குறிப்பிடுகிறார்.

எனவே குருசேவையே எம்மை பிறவிப் பிணி தீர்க்கும் விடுதலைக்கு (நிர்வாண) இட்டுச் செல்கிறது.

3. துமிஹோ மாதா பிதா, துமிஹோ சாயி குருதேவா...

நீரே எமது அன்னை. தந்தையும் நீரே சாயி குருதேவா இது நேரடிப் பொருள்.

மேற் சொன்னபடி குருவருளுக்கு நம்பிக்கை, ஒரு முனைப்பட்ட மனத்துடனான சேவை என்பவற்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தோம். ஆனால் அவை எமக்கு அகங்காரத்தை தந்து விடாமல் நாம் பணிவாக நம் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு நம் பெற்றோரை பணிதல் அவர்களுக்கு சேவை செய்தல் ஆகியவை தேவையாகும். "உனது பெற்றோரே உனது முதல் குரு" என்கிறார் நம் சுவாமி. ஏனெனில் உலகத்தை உனக்குக் காட்டித் தருவதும், என்னையே உனக்குக் காட்டித் தருவதும் உன் பெற்றோரே! என்கிறார்.

பணிவு வரும் போது பக்குவம் வருகிறது. பக்குவம் வரும்போது பக்திபெருகுகிறது. பக்தி பெருகும் போது பகவான் தெரிகிறார். பகவான் தெரிகிற போது பெற்றோரும் அவராகவே தெரிகிறார்கள். அப்படித் தெரிவது அகங்கார மற்ற நிலை.

அப்போது அன்னைக்கும் மேலானஆயிரம் மடங்கு அன்பும் தந்தைக்கும் மேலான பல மடங்கு ஞானமும் பெற்றவர் நம் சுவாமி என்று புரிகிறது. தெளிவு வருகிறது. தாய் சொல்லைத் தட்டாதே, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற வார்த்தைகளுக்காக வாழ்ந்து காட்டும் வைராக்கியம் ஏற்படுகிறது.

வளமான வாழ்வு வாழ்கிறோம். இவை அனைத்திற்கும் காரணமான சாயியின் தாய், தந்தை அன்புக்கு ஈடு இணையில்லையென்று அவர்களைக் குருவாகப் போற்றுகிறோம்.

4. சத்யஸ்வரூபா ராக திகாஹோ சாயி குரு தேவா...

சத்தியத்தின் வடிவமான சாயி குருதேவரே எமக்கு வழி காட்டுபவர் ஆவார் என்பது இதன் நேரடிப் பொருள்.

அன்னையிலும் தந்தையிலும் அவரைக் கண்டு நிர்வாண நிலையில் அவரை உணர்ந்த நாம் உருவமில்லா அந்த உண்மைக்கு ஒரு உருவம் கொடுக்கிறோம். இல்லை! அதுவே சத்தியத்திற்கு உருவம் கொடுத்து எமக்கு வழிகாட்ட குருவாக வந்திருக்கிறது.

உண்மையில் அது எமக்கு வழிகாட்ட உருவமில்லாத உண்மை, தன்னைத்தானே உருவமாக பிறப்பித்துக் கொண்டது. அதுவே சத்தியத்தின் உருவம்.

தானே வாழ்ந்து காட்டி, பின் வழிகள் சொல்லி, எம் விழிகள் திறந்து இயற்கை முழுதும் என்னைப் பார் அதன் இயக்கம் முழுவதும் என்னை உணர்வாய் என்று கூறியதோடு மட்டுமல்லாது "இயற்கையே உனது குரு"என்றும் சொல்லி வைத்தார். அதுதான் சாயி எனும் குருதேவன் - என்னும் எம் பரந்தாமன்.

5.குரு சேவபினா நிர்வாணநஹி ஜெய சாயிகுருதேவா

அனைத்திலும் சாயி என்று அனுபவ ஞானத்தில் உணர்ந்து செயற்பட்டுசேவை செய்தால், பற்றற்ற நிலையில் பணிகள் செய்யும் பக்குவம் வரும். அகங்காரமில்லாத என்றும் நிலைக்கும் தெய்வீகம் (நிர்வாண) எம்மீதுவெளிப்படும். இதுவெ சாயி குரு எம்மிடம் எதிர்பார்ப்பது.

ஜெய் சாயிராம்

ஓர் அன்பன்
ஜூன் 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் அமெரிக்காவில் சுவாமியின் செயற்பாடுகள்

லியோனார்டோகற்றர் (Leonardo Gutter)
பிரசாந்தி சபை அங்கத்தவர்
நேர்காணலில் பேராசிரியர் வெங்கடராமனிடம் கூறியது.

ரேடியோசாயி 2003 ஜனவரி

தென்அமெரிக்காவில் 13 சத்திய சாயி பாடசாலைகள் உள்ளன. 159 பாடசாலைகளில் மனித மேம்பாட்டுக்கல்விபுகட்டப்படுகின்றது.

ஆர்ஜென்ரீனாவில் நடந்தவை:

அந்நாட்டுக் கல்விஅமைச்சர் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தால் கவரப்பட்டு சகலபாடசாலைகளுக்கும் முடிந்தளவு விஸ்தரிக்குமாறு சத்திய சாயி கல்வி நிறுவனத்தின் பணிப்பாளரைக் கேட்டார். அங்கு எமது சேவைப்பணியாக தெருவில் திரியும் பிள்ளைகளைப் பராமரிக்கத் தொடங்கினோம். அவர்களை சாயி நிலையத்திற்கு அழைத்து குளிக்க வைத்து உணவும் அளித்து மனித மேம்பாட்டு வகுப்புகளையும் நடத்தி வந்தோம். இவர்கள் திரும்பவும் வீதிகளிலேயே காலத்தைக் கடத்துவதால் முன்னேற்றம் திருப்தியாக இருக்கவில்லை. எமது பண வசதிக்கேற்ப ஒரு பாழடைந்த வீட்டை வாடகைக்கு எடுத்து அதை அவர்களின் விடுதியாக்கினோம். ஒருநாள் இந்த வீட்டைத் துப்புரவு செய்யும் பணியில் 3 பிள்ளைகள் சேர்ந்தார்கள். வீட்டிற்குப் பொறுப்பான பெண்மணி இவர்களை முற்றத்தில் பூக்கன்றுகள் நடுவதற்கு நிலத்தை தோண்டச் சொன்னார். சிறுவர்கள் தோண்டும் போது ஒருபை கிடைத்தது. அவர்கள் திறந்து பார்த்ததும் தங்கக்கட்டிகள் (13Kg) இருந்தன. அவர்களுக்கு அதை எடுத்து ஓட வேண்டும் போல் தென்பட்டது. ஆனால் மனித மேம்பாட்டு வகுப்புகளில் படித்தது நினைவுக்குவர அந்தப் பையை வீடு நடத்தும் பெண்மணியிடம் கொடுத்தார்கள். அவரும் திறந்து பார்த்து அதிசயப்பட்டார். பின்னர் அந்தத் தங்கக்கட்டிகள் யாருக்குச் சொந்தம் என நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்கள். நீதிமன்றம் இவர்களுக்கே சேர வேண்டுமென தீர்மானித்தது.

தங்கத்தைவிற்று இரண்டு வீடுகள் வாங்கி அங்கு ஆதரவற்ற பிள்ளைகளுக்கு வதிவிட வசதிகள் அளித்தார்கள். தங்கத்தைக் கண்டு பிடித்த மூன்று சிறுவர்களில் ஒருவனுக்கு ஒருகால் இல்லை. சாயி அன்பர்கள் செயற்கைக் கால் பூட்ட உதவி செய்தார்கள். அப் பிள்ளை சுவாமியைப் பார்க்க வேண்டு மென்று ஆவல் கொண்டான். பிரசாந்தி நிலையத்திற்கு சாயி அன்பர்கள் அழைத்து வந்தார்கள். சுவாமி அச் சிறுவனை

நேர்காணலுக்கு அழைத்து அந்தத் தங்கக்கட்டி கொண்ட பையைத் தானே வைத்ததாகக் கூறினார். நாம் ஒரு அடி எடுத்தால் சுவாமி நூறு அடிகள் எடுத்து வருவார்.

பட்டத்தின் மூலம் படிப்பினை

"இமைகள் கண்களை பாதுகாக் கின்றனவோ அதைப்போல் நான் உங்களைப் பாதுகாப்பேன்."

"நீ என்னை வைத்திருப்பது போல நானும் உங்களை வைத்திருப்பேன்"

"நான் ஒருபோதும் உன்னை கைவிட மாட்டேன், நீயும் என்னை விட்டு அகல முடியாது,"

"சத்தியமே எனது பிரச்சாரம்"

- சத்திய சாயி பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்ய சாயி காயத்திரியின் மகிமை

(V.S.R Murthy அவர்களின் உரையின் ஒருசிறுபகுதியின் தமிழாக்கம்)

ஓம் சாயீஸ்வராய வித்மஹே
சத்யதேவாயதீமஹி
தன்ன: சர்வ: ப்ரசோதயாத்

1977ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் திகதி என்று நினைக்கிறேன். வைட் வீல்ட் பிருந்தாவனத்தில் சுவாமி மேடையில் கம்பீரமாக அமர்ந்திருந்தார். அப்போது சுவாமி கண்டகோட்ட சுப்ரமணிய சாஸ்திரி அவர்களை அவருக்கு விருப்பமான தலைப்பில் ஆன்மீக சொற் பொழிவு ஆற்றும் படி கேட்டுக் கொண்டார். சாஸ்திரி அவர்கள் மைக் அருகில் சென்றதும் என்ன பேச வேண்டும் என்பதை மறந்து விட்டார். தானாகவே

"ஓம் சாயீஸ்வராய வித்ம ஹே

சத்ய தேவாய தீமஹி

தந்நசர்வப்ரசோதயாத்" என்ற சத்ய சாயி காயத்ரி மந்திரம் அவரது வாய் வழியாக வெளிப்பட்டது. சாஸ்திரிஅவர்கள் மிகமிக உயர்ந்த ஞானம் பெற்றவர். மிகவும் பழுத்த ஆத்மா. அதனால் தான் சத்ய சாயி காயத்ரியை உலகத்திற்கு வழங்கிய ரிஷியாக கருதப்படுகிறார். ஆனாலும் தான் கூறிய காயத்ரியில் ஏதொ பிழையிருப்பது போல் உணர்ந்தார். உடனே சுவாமியின் இருக்கைக்கு அருகில் சென்று, "சுவாமி எனக்கு எத்தனையோ காயத்ரிகள் தெரியும். ஆனால் இன்று உங்கள் முன்னிலையில் இந்த காயத்ரியை அடியேன் வெளிப்படுத்த அருள் புரிந்துள்ளீர்கள். அதனால் அடியேனும் ஒரு ரிஷியாகி விட்டேன்! அதற்கு எப்போதும் அடியேன் உங்களுக்கு நன்றிக் கடன் பட்டவன்"என்றார். மேலும் சாஸ்திரி, "சுவாமி நான் சாயி ஸத்யப்ரசோதயாத் என்று கூறியிருக்க வேண்டும். அதுதான் உங்கள் நாமம். ஆனால் நான் சாயி ஸர்வஹ ப்ரசோதயாத் என்று கூறிவிட்டேன் சுவாமி!"என்றார். உடனேசுவாமி, "இல்லை இல்லை நீ செய்தது முற்றிலும் சரி தான்! ஏனென்றால் மகாமந்தர அர்ணவா எனும் சாஸ்திரம் எல்லா மந்திரங்களையும் தன்னுள் அடக்குகிறது. அர்ணவா என்றால் கடல். கடல் போன்ற அந்த சாஸ்திரம் தான் மகாமந்திர அர்ணவா. மகாமந்திர அர்ணவாவில் சிவனையோ, பரமேஸ்வரனையோ, பரப்பிரம்மனையோ, பரமாத்மனையோ சத்யா என்றா அழைக்கிறார்கள்? அல்லது அவர்களை ஸர்வ என்று அழைக்கிறார்களா? 'ஸர்வேப்யோ ஸர்வ ஸர்வேப்யோ' என்கிறார்கள் அதனால் "ஸர்வ" என்பதுசரி என்றார். சுவாமி ஒரே வினாடியில் அதனை சரிஎன்று கூறினார். ஆனால் சாஸ்திரிகள் உடனே"சுவாமி! நீங்கள் எப்போது மகாமந்தர அர்ணவா கிரந்தத்தை படித்தீர்கள்?" என கேட்டார். அதற்கு சுவாமி "அந்த மகாமந்திரகிரந்தமேநான் தான்!" என்றார். "நானே அந்த மந்திரம்"என்று கூறினார். மேலும் சாஸ்திரி ஒவ்வொரு காயத்ரி மந்திரத்திலும் 108 பீஜ அட்சரங்கள் மட்டும் தான் இருக்கும். ஆனால் இந்தகாயத்ரியில் 109 பீஜஅட்சரங்கள் இருக்கின்றன. இது ஏன் என்று புரியவில்லை? என சுவாமியிடம் கூற, அதற்கு சுவாமி ஒவ்வொரு காயத்ரியும் தனித்துவமானது. எப்படி ஹயகிரிவ காயத்ரியில் ஹயகிரிவா என்று இல்லாமல் ஹம்சா என்று இருக்கின்றதோ அதுபோல. இப்பொழுது 108 அட்சரங் களுக்கு பதிலாக 109 இருப்பது பற்றி ஆராய்வோம். சாஸ்திரிநீர் மற்ற காயத்ரி மந்திரங்களை தியானம் செய்யும் போதும், சிந்தனை செய்யும் போதும்,உச்சரிக்கும் போதும், முணுமுணுக்கும் போதும், அந்த காயத்ரி மந்திரங்கள் உங்களுக்கு வரத்தை கொடுப்பதற்கும் கொஞ்ச நேரத்தை எடுத்துக் கொள்ளும். ஒருவரத்திற்காக 108 முறையோ அல்லது ஒருலட்சம் முறையோ காயத்ரியை உச்சாடனம் செய்ய வேண்டும். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த உலகத்திற்கோ அல்லது உங்களுக்கோ அமைதி வேண்டும் என்று நினைத்தால் **சத்ய சாயி காயத்ரியில் ஈடுபட்டு அதை பற்றி சிந்தனை செய்த கணமே உங்களுக்கு அமைதி கிடைத்து விடும்.** அதுதான் சாயி காயத்ரியின் ஆற்றலும் மகிமையும்! எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்ரிக்கும் பலனுக்காக காத்திருக்க வேண்டும். ஆனால் சாயிகாயத்ரியின் பலன் அந்தகணமே கிடைத்து விடும்! பகவான் சாயி காயத்ரியின் ஆற்றலுக்கு உத்தரவாதம் தருகின்றார். எனவே சாயி அன்பர்களே! சத்ய சாயி காயத்ரியை நேரம் கிடைக்கும் போதெல்லாம் இடையறாது உச்சரிக்க வேண்டும்.எமக்கும் இந்த உலகத்திலுள்ள அனைவருக்கும் நல்லதே நடக்கும். சுவாமி இருக்கப் பயம் ஏன்?

ஜெய்சாயிராம்.

எழுத்துருவாக்கமும் தொகுப்பும் :-
சாருகா தர்மதயாளன்.

யாழ்ப்பாணம் சத்தியசாயிநிலையம்.

மூலம் :- https://youtu.be/2EJe1Otr3C0
(Youtube.com)

தேசிய சேவைத் திட்டம்

சத்திய சாயி முதியோர் இல்லம் - மீகொட - கொழும்பு

இது 32 கி.மீ கொழும்பிலிருந்து அமைந்துள்ளது. ஆரம்பத்தில் 20 பெண்களும் 20 ஆண்களும் பராமரிப்பதென திட்டமிடப்பட்டு கட்டிடத்திற்கான பூமி பூஜை 28.05.2015 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்த முதியோர் இல்ல கட்டிடம் 2017.04.30 திகதியன்று இலங்கை அரசின் சமாநாயகர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இச் சேவைப் பணியிலும் நீங்கள் இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: 0094 112687014,
0094 777316935
E mail - info@ssiosrilanka.org
website: www.ssiosrilanka.org

சாயிமாதா! சாயிமாதா! இதயம் நிறைந்த சாயிமாதா!

சாயிமாதா!சாயிமாதா!இதயம் நிறைந்தசாயிமாதா!
உந்தன் பார்வைபோதுமேஎந்தன் துயரம் தொலையுமே!
கடைக்கண் பார்வைஅருளினால் கனவாய்ப் போகும் கவலைகள்!
இமயம் போன்றதுயரமும் இளகும் உந்தன் பார்வையால்!
பழமைவினைகள் மாறுமே!செழுமைவாழ்வில் ஓங்குமே!
அகிலம் போற்றும் அன்னையே!அருள்வாய் உந்தன் கருணையை
உம்மைநம்பிவாழ்கின்றோம் எம்மைகாப்பாய் அன்னையே!
சாயிமாதா!சாயிமாதா!சாயிமாதா!சாயிமாதா!

ந.புவனேந்திரன்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபுராணம் எமது சுய புராணம்

ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெரும் ஜோதி"என்றுதிருவெம்பாவையில் குறிப்பிட்டு விட்டு அந்த சிவபெருமானுக்கு புராணம் எழுத மணிவாசகப் பெருமான் துணிய மாட்டார். புராணம் எழுதுவதற்கு சில இலக்கணங்கள் உண்டு. தாய், தந்தையார் பெயர், பிறந்த ஊர் இப்படி சில அடிப்படைச் செய்திகள் வேண்டும். இவை எதுவுமேயற்ற சிவபெருமானுக்கு புராணம் எப்படி எழுத முடியும்?

நான் பல வருடங்களாக சிவபுராண சாதனை செய்து வருகிறேன். அப்போது எனது மனத்தில் உதிர்ந்த சில புதிய கருத்துக் களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

திருப்பெருந்துறையில் பல அந்தண சிவாச்சாரியார்கள் வேதம் ஓதுவதைக் கண்ட மணிவாசகர் அவர்களுக்கு தலைமைச் சிவாச்சாரியாராக வீற்றிருந்த சிவபெருமானை பாதத்தில் வீழ்ந்து வணங்கிய போது தற்செயலாக சிவனின் பாதங்கள் அவரின் தலைமேல் பட்டதாக நடித்து பாத தீட்சை கொடுத்தார். பரவச நிலையை அடைந்த மணிவாசகரிடம் **வேதங்களை தமிழில் பாடு** என்று கட்டளையிட்டார். அவர் பாடிய திருவாசகம் முழுவதும் வேதக் கருத்துக்கள். முதலில் வந்தது சிவபுராணம். இதுவேதத்தின் சாரம் எனக் கூறலாம்.

மணிவாசகர் சிவம் எனக் குறிப்பிடுவது ஆத்மாக்களாகிய எங்களையே!. எங்கள் ஒவ்வொருவரிலும் இருந்து இயக்கிக் கொண்டிருக்கும் சிவத்தின் வரலாற்றைக் கூறுவதே சிவபுராணம்.

இந்த ஆத்மாவின் ஆரம்பம், தற்போதைய நிலை, எதிர்கால இலட்சியம் என இந்த ஆத்மாவின் வரலாறு சிவபுராணத்தில் தெளிவாகக் குறிப்பிடப் படுகிறது.

முதலில் ஆத்மாவின் கடந்தகாலம், புல்லாகிப் பூடாகிபுழுவாய் மரமாகி பல் மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் என்று முடிக்கிறார் எமது கடந்த காலத்தை. இந்த தாவரசங்கமத்தில் எல்லாமாக பிறந்தது நானே! என்று கூறியதன் மூலம் இந்த பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ளது ஒரே ஆத்மாதான் என்ற வேத உண்மையை மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுகிறார். ஒரேஆத்மாதான் புல்லிலும் பூண்டிலும் மரங்களிலும் மிருகங் களிலும் பறவைகளிலும் முனிவர்களிலும் தேவர்களிலும் பரந்துள்ளது.

"ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி" என்ற வேத வாக்கியத்தை தெளிவாக்கி யுள்ளார். இது எங்கள் ஒவ்வொருவரினதும் கடந்தகாலம்.

நாங்கள் பலபிறப்புக்கள் இத் தாவர உலகில் பிறந்து இன்று மனிதரூபத்தை எடுத்து இறைவனை நோக்கிய பயணத்தில் நல்ல வசதிகள் பெற்ற மனித ரூபத்தை எடுத்துள்ளோம். இது எங்கள் ஒவ்வொரு வரினதும் கடந்தகாலம். இந்த உண்மையை மறந்து நான்வேறு, அவர் வேறு மிருகங்கள், பறவைகள் வேறு என வேறு படுத்திப் பார்க் கிறோம். இவை எல்லாம் நானே என்ற உணர்வைப் பெற்றோமானால் இறைவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய பயணத்தில் நல்ல முன்னேற்றத்தை அடைவோம். இந்த இலட்சியத்திற்காகத்தான் எமக்கு மனித ரூபம் தரப்பட்டுள்ளது. எத்தனையோ ஆயிரம் பிறப்புகள் பிறந்து களைத்த பின்னர் இந்த மனிதப் பிறப்பு கிடைத்துள்ளது. (எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமானே! சிவபுராணம்)

அடுத்து நிகழ்காலம். அதாவது தற்போது எமக்குக் கிடைத்துள்ள மனிதப் பிறப்பின் அவல நிலையைப் பார்ப்போம்.

'வல்வினையேன் தன்னை மறந்திட மூடியமாய இருளை அறம், பாவம் எனும் அருங்கயிற்றால் கட்டி புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி...."ஆத்மாவாக இறைவனுடன் இருந்த என்னை மாயையால் மூடி நான் முன்பு பல்லாயிரக் கணக்கான பிறவிகளில் செய்த பாவ-புண்ணியங்களை ஒரு கயிற்றால் கட்டி ஒரு தோற்பையினுள் போட்டு அதற்கு புழு அழுக்குகளைப் போட்டு மூடி விட்டு அந்த தோற்பையிற்கு 9 துவாரங்கள் வைத்து அவற்றினூடாக அருவருக்கத்தக்க கழிவுகளை வெளியேற வைத்து,மேலும் எம்மை ஏமாற்றி தடம் புரள வைக்கக்கூடிய ஐம்புலன்களை வைத்து, மிருகம் போன்ற ஒரு மனத்தைத் தந்து, இறைவனை நோக்கி வணங்க தடையாக இவை இருந்து இறைவனை உள்ளார்த்தமாக வணங்க தடையாக உள்ளன. இதுதான் எங்கள் தற்போதைய நிலை.

பல பிறவிகளில் நாம் செய்தபாவ-புண்ணியங்களை சேர்த்துக் கட்டி ஒரு தோற்பையினுள் போட்டு உடம்பு என்ற பெயரில் வந்துள்ளோம். இந்த தோற்பைக்கு 9 வாசல், கண்துவாரம் இரண்டு, காது துவாரங்கள் இரண்டு, மூக்கு துவாரங்கள் இரண்டு, வாய்த்துவாரம் ஒன்று, மல-சல வாயில்கள் இரண்டு. ஆக மொத்தம் 9. இவற்றின் ஒவ்வொன்றினூடாக வெளியே வருவது என்ன என்பதை உங்கள் சிந்தனைக்கே விட்டு விடுகிறேன். இதுதான் எமதுகுடிசை. இவற்றுள் வெளியே என்ன நடக்கிறது என்று வேவு பார்க்க 5 புலன்கள். மெய் - தொடுகை உணர்வு, வாய் - பேச, சாப்பிட, கண் - வெளிக் காட்சிகளை உடனுக்குடன் மனத்திற்குச் சொல்ல, மூக்கு மணங்களை உணர, சுவாசிக்க, செவி- பிறர் சொல்வதைக் கேட்டு மனத்திற்கு அறிவிக்க, இந்த 5 புலன்களும் தாங்கள்தான் எமக்கு மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுப்பதாக மனத்தை மயக்கி தம் வசப்படுத்தி வைத்து மனத்தின் கருவியாக இருக்க வேண்டிய புலன்கள் மனத்தின் எசமானாக மாறிவிடுகின்றன. மனம் புலன் வழியேசெல்கிறது. இதையே பழக்கப்படுத்தி மனம் மிருகமாகி சரியானதை சிந்திக்கவும் மறுக்கிறது. இவற்றை வைத்துக் கொண்டு இறைவனே! உன்னை மனதார, உளமார வணங்க முடியாதவனாக இருக்கிறேன். இதுதான் எங்கள் ஒவ்வொருவரினதும் தற்போதைய நிலை.
மிகவும் பரிதாபகரமானநிலை.

எங்கள் எதிர்கால இலட்சியம் எதுவாக இருக்க வேண்டும் என்பதை மணிவாசகர் மிகத் தெளிவாகக் கூறுகிறார். "பொய் கெட்டு மெய்யானால் மீட்டு இங்கு வந்து வினைப் பிறவிசாரக் கூடாது." "கள்ளப் புலைக் குடம்பு" "அல்லற் பிறவி அறுப்பானே!" என்ற வரிகளால் நாம் பிறப்பற்ற தன்மையை எய்தி முக்தியை அடைந்து இறைவனுடன் ஒன்று சேர வேண்டும் என்ற இலட்சியத்தைமிகத் தெளிவாக சுட்டிக் காட்டுகிறார்.

ஆகவே எமது முற்பிறப்பு, தற்போதைய உடம்பின் அவல நிலை எதிர்கால இலட்சியம் என்ன? என்பதை தெளிவாக கூறி எங்கள் ஒவ்வொருவரினதும் ஆத்மாவின் புராணத்தைக் கூறுவதேசிவபுராணம். இந்த சிவபுராணத்தில் சில அற்புதங்களையும் காணலாம். மணிவாசகர் 658 பாடல்களைப் பாடியுள்ளார். இந்தக் கணக்கை சிவபுராண ஆரம்பத்திலேயேதான் எவ்வளவு பாடல் பாடப் போகிறேன் என்பதை மிக சூட்சுமமான முறையில் கூறியுள்ளார்.

"நமசிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்று வாழ்க என 6 தடவை கூறியுள்ளார். அடுத்து "வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என்று வெல்க என்பதை 5 தடவை கூறியுள்ளார். அடுத்து "ஈசன் அடிபோற்றி" என்று 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவை போற்றி என்று கூறியுள்ளார். இவை வரும் முதல் அடிகளில் 6, 5, 8 என்ற எண்களை சேர்த்துப் பார்த்தால் 658 மணிவாசகர் பாடிய மொத்த திருவாசக பாடல் எண்ணிக்கை. மேலும் 32ஆவது அடி "மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" என்பதாகும். மணிவாசகர் தமது 32 ஆவது வயதில் வீடுபேறு அடைந்தார். இதனை முன்னதாகவே சிவபுராணத்தின் 32ஆவது வரியில் கூறிவிட்டார்.

மேலும், "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே" என்ற வரிக்கு பலர் எழுதிய கருத்தில் நடு இரவில் நடனமாடும் சிவபெருமானே" என்றும் மயானத்தில் நடு இரவில் நடனமாடும் சிவபெருமான் எனவும் கருத்து போடப்பட்டுள்ளது. இது பொருத்த மில்லாத கருத்தாக தோன்றுகிறது. "நள்ளிருள், நடு இரவு ஆழ்ந்த உறக்க நிலை. ஆழ்ந்த உறக்க நிலையில் உடம்பு இல்லை, மனம் இல்லை ஆத்ம நிலை. "மாற்ற மனங் கழிய நின்ற மறையோனே!" ஆத்ம நிலை. அப்போதும் இருதயம் வேலை செய்கிறது. இரத்தோட்டம் நிகழ்கிறது. சுவாசம் சீராக இயங்குகிறது. ஆகவே நடு இரவில் ஆழ்ந்த உறக்க நிலையில் உள்ளுறுப்புகள் எல்லாம் சீராக இயங்குகிறது. இதைத்தான் மணிவாசகர் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!" என்றுதாளம் தப்பாமல் நடனமாடும் இயக்கமாக எம்முள் இருக்கும் இறைவன் இவற்றை சரியாக இயக்கிக் கொண்டிருக்கிறார் என்பதேபொருத்தமானகருத்தாக இருக்கலாம்.

ஆகவே சிவபுராணம் என்பது எங்கள் ஒவ்வொருவரினதும் சுய புராணம் தான் என்பது உறுதி. சிவனுக்கு யாரும் புராணம் எழுத முடியாது.

ஜெய் ஸாயிராம்

S.R.சரவணபவன்,
தாவடி.

ஆண்டவன் கொடுத்த பிரார்த்தனை

ஆண்டவனே! எனது அன்பை எடுத்துக்கொள்ளுங்கள்
அவை உம்மை நோக்கி பக்தியாகப் பிரவகிக்கட்டும்.
ஆண்டவனே! எனது கைகளை எடுத்துக் கொள்ளுங்கள்
அவை உங்களுக்காக இடைவிடாது சேவை செய்யட்டும்.
ஆண்டவனே! எனது ஆன்மாவை எடுத்துக் கொள்ளுங்கள்
அது உங்களுடன் இரண்டறக் கலக்கட்டும்.
ஆண்டவனே! எனது மனதையும் எண்ணங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்
அவை உம்முடன் இசைவாக நிலைக்கச் செய்யுங்கள்
ஆண்டவனே! எனது எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள்
என்னை உமக்காகவே செயற்படும் கருவியாக வைத்திருங்கள்.

அன்புடனும் அருளுடனும்
பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சொன்ன கதை

பக்தர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது சந்தேகங்களைக் கேட்கும்படி சுவாமி சொன்னார்.

பக்தன் : சுவாமி, இறைவன் அவதாரம் எடுத்துவந்தால் ஏன் முழு உலகையும் சீராக்குவதில்லை? அவரின் கிருபை சிலருக்கே கிடைக்கிறது. இதுநியாயமா?

சுவாமி :அப்படியில்லை. கடவுள் அநியாயம் செய்யமாட்டார். நான் ஒரு கதை சொல்கிறேன். ஒருநாள் நாரதர் எண்ணினார், "உலகில் பலபிழைகள் நடக்கின்றன. விஷ்ணு பகவான் ஒன்றும் செய்யாது இருக்கிறார். அவர் என்னை அனுப்பினால் நான் மக்களை சரியான பாதையில் வாழச் செய்வேன்." இந்த எண்ணத்துடன் வைகுந்தம் சென்றார். விஷ்ணு பகவான் நாரதரை வரவேற்று "வந்த காரணம் என்ன?" என்று கேட்க, நாரதர் தான் எண்ணியதைச் சொன்னார். விஷ்ணு பகவான் "நீ பூலோகம் சென்று பக்தி மார்க்கத்தைப் பரப்பு, எனக்கு மிகவும் விரக்தியாக இருக்கிறது. ஆகவே நீ போய் இந்த வேலையைச் செய். பூவுலகில் ஓர் காட்டில் காகம் ஒன்று மரத்தில் இருக்கிறது. அதனிடம் போய் "கோவிந்தா"என்று மூன்று தடவைகள் சொல். நடந்ததைப் பின்பு என்னிடம் வந்து சொல்"என்றார்.

நாரதர்,காகம் இருக்கும் மரத்தடியில் மூன்று முறை "கோவிந்தா" என்று சொல்ல காகம் இறந்து கீழே விழுந்தது. நாரதர் நடந்ததைப் போய்ச் சொல்ல, செய்ததைத் திரும்பவும் ஒரு கிளிக்கு முன்னால் செய்யச் சொன்னார். கிளியும் மூன்று தடவை "கோவிந்தா" என்று சொல்ல உயிர்நீத்தது. நடந்ததைப் போய்ச் சொல்ல விஷ்ணு பகவான் இதையே ஒரு கன்றுக்குட்டிக்கு முன்னால் போய்ச் சொல்லச் சொன்னார். நாரதர் தயக்கம் அடைந்தார். கன்றும் இறந்து விட்டால் அதன் உரிமையாளரான பிராமணன் என்மீது சாபம் போடுவான் என்றார் நாரதர். இன்னும் ஒருதடவை போய்ச் செய்யும்படி விஷ்ணு பகவான் சொன்னார். கன்றுக்குட்டியும் இறந்தது. நாரதர் ஓடிப்போய் விஷ்ணு பகவானிடம் சொன்னார். தான் இனிமேலும் செய்தால் சாபம் போடப்பட்டு விடுவேன். விஷ்ணு கடைசித் தடவையாக புதிதாகப் பிறந்த அரசகுமாரனிடம் போய்ச் சொல்லுமாறு கேட்டார். நாரதர் மிகவும் பயத்துடன் அரசகுழந்தைக்கு முன்னால் இறை நாமத்தைச் சொன்னார். அரசகுமாரன் உடனே எழுந்து நாரதருக்கு நன்றி கூறி தான் முதலில் காகமாகவும் பின்பு கிளியாகவும் பின்பு கன்றுக் குட்டியாகவும் பிறந்து உமது உபதேசத்தால் அரசகுமாரனாகப் பிறந்துள்ளேன். தங்களின் தரிசனம் கிடைத்து எனது வாழ்வு



நிறைவடைந்து விட்டது. உங்களுக்கு நமஸ்காரம் என்று அரசகுமாரன் வணங்கினார்.

இதை அனுபவித்த நாரதர் மிகவும் வெட்கமடைந்தார். இறைவன் எப்போதும் நன்மையே செய்வார். அவரின் நாமத்தைச் சொல்லியே மேன்மையான பிறப்பை அடைந்தார்கள். அவரின் மகிமையை நான் உணராது அவரில் குறை கண்டேன். மனவருத்தத்துடன் வைகுந்தம் சென்று விஷ்ணு பகவானிடம் மன்னிப்புக் கேட்டார்.

(ஸ்ரீ சத்தியசாயி ஆனந்ததாயி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு பிரானும் சத்ய சாயி பாபாவும்



தெய்வீக மகான்கள் வாழ்ந்த காலத்தில், அவர்களால் மக்களுக்குக் கொடுக்கப்பட்டவைகளாவன, தெய்வீக நாமம், தெய்வீக ரூபம், போதனைகள், வாழ்க்கைச் செய்தி, நிறுவனங்கள் ஆகியவையாகும்.

அவர்கள் சொல்வதில் மேலோட்டமான கருத்தும் ஆழமான மறைந்த கருத்துமிருக்கும். மேலோட்டமான கருத்துக்களால் மக்கள் முரண் பாடடையலாம். ஆழமான கருத்தை விளங்கிக் கொண்டால், பன்மையில் ஒருமையை உணர்ந்து, எல்லோரும் இன்பமாக அமைதியாக வாழ்ந்து இறைவனை அடையலாம்.

ஒரு தெய்வீக மகானின் உண்மையான நிலையையும் போதனைகளையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் இன்னொரு தெய்வீக மகானால்தான் ஓரளவு விளங்கி மக்களுக்கு விளங்கப்படுத்த முடியும்.

இந்த நோக்குடன் இயேசு பிரானின் வாழ்க்கை வரலாறு, போதனைகள், சில நிகழ்வுகளைப் பற்றியும் சத்ய சாயி பாபா கூறியுள்ளதைப் பார்த்தால் இயேசு பிரானின் தெய்வீகத் தன்மையை மென்மேலும் உணரலாம். வாழ்க்கையில் நிகழ்ந்த சில இடை வெளிகளைப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

சத்ய சாயி பாபாவின் பிரசாந்தி நிலையம் என்ற ஆச்சிரமம் இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி என்ற பின்னடைந்த கிராமத்திலுள்ளது. அங்கு உலகிலுள்ள மக்கள் எல்லோரும் இன. மத பேதமின்றி விழாக்களில் பங்கு பற்றுவார்கள். அங்கு கிறிஸ்மஸ் விழா வருடாவருடம் விமரிசையாகக் கொண்டாடப்படும். அவ் விழாக்களின் போது, சத்யசாயி பாபா இயேசு பிரானின் வாழ்க்கைப் போதனைகளைப் பற்றி அருளுரை நிகழ்த்துவார். அவ்வுரைகளில் கூறியவற்றில் சிலவற்றையே இங்கு விளங்க முற்படுவோம்.

சத்ய சாயி பாபா தான் ஒரு புதிய மதத்தை நிறுவ வரவில்லையென்றும் அவரவர் மதத்தின் மூலம் இறைவனை அடையச் செய்ய உதவுவதற்குமே வந்துள்ளேன் என்றும் பலமுறை கூறியுள்ளார். சகல மதங்களும் உண்மை யானவை யென்றும், சமமானவை யென்றும், ஒரே கடவுளை அடையும் வழிகளென்றும் வலியுறுத்தியுள்ளார். இவரை மக்கள் சர்வ மதப் பிரியனென்றே அழைப்பார்கள்.

பிறப்பு:- இயேசு பிரான் பெத்தலகாமில் கி.மு. 7ம் ஆண்டு பிறந்தார் என்று கணித்துள்ளார்கள். சத்ய சாயி பாபா புட்டபர்த்தியில் 23.11.1926ம் ஆண்டு பிறந்துள்ளார். இருவரின் பிறப்புகளும் உடற்புணர்ச்சியாலல்லவென்றும், பரிசுத்த ஆவியின் மூலமே தாய்மார் கருத்தரித்தார்கள் என்றும் அறிகிறோம். இதில் இருவருக்குமுள்ள ஒற்றுமையை அறியலாம்.

பிள்ளைப் பருவம்:- இருவரும் பெற்றோர்களை மதித்து, ஆன்மீக ஞானமுள்ளவர்களாகவும் கருணை உள்ளம் கொண்டவர்களாகவும் திகழ்ந்தார்கள். இயேசு பிரான் 12 வயதில் ஜெருசலம் கோவிலில் பல கேள்விகள் கேட்டு குருமாரை அதிசயிக்க வைத்தார். சத்யசாயி பாபாவையும் அவரைச் சேர்ந்த சிறுவர்கள் அவரை ஞானியென்றே அழைத்தார்கள்.

சத்யசாயி பாபா 20.10.1940 இல், பாடசாலை, வீடு, உறவினர்கள் யாவற்றையும் துறந்து தனது தெய்வீகப் பணியை ஆரம்பித்தார். இயேசு பிரான் 12 வயதிற்குப் பிற்பாடு 30வது வயதில்தான் ஜெருசலம் திரும்பி போதிக்கத் தொடங்கினார். இந்த 18 வருடங்களில் என்ன செய்தாரென்பதை விவிலிய நூலில் குறிப்பிடப்படவில்லை.

அவர் தெய்வீகத்தை அனுபவிக்க வனாந்தரங்களிலும் இமயமலை ஆச்சிரமங் களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஷ்மீர், தீபெத், பேர்ஷியா ஆகிய இடங்களுக்குச் சென்று உச்ச நிலையை அடைந்தார் என்றும் சத்யசாயி பாபா கூறியுள்ளார். அங்கு புத்த ஞானிகளுடன் தொடர்பு ஏற்பட்டிருக்கலாமென்றும் ஊகித்து ள்ளனர்.

30வது வயதில் இயேசு பிரான் யோவான் பப்ரிஸ்ரினால் (John the Baptist) ஞானஸ்நானம் செய்யப்பட்டார். பின்பு மூன்று வருடங்கள் வரை தீவிரமாக போதனைகளில் ஈடுபட்டார். இக் காலத்தில் 12 சீடர்கள் பின் தொடர்ந்தனர்.

சத்ய சாயி பாபா, இயேசு பிரானின் வாக்குகளை நான் தேவனின் தூதன், நான் தேவனின் மகன், நானும் தேவனும் ஒன்று என்பது ஆன்மீக வளர்ச்சியின் நிலைகளென்று உதாரணம் காட்டியுள்ளார். இயேசு பிரான் சகலரையும் ஒளி மிளிர்ந்தவர்களாக வரவேண்டும் என்று உத்வேகம் அளித்தார்.

இயேசு பிரான் தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி, எப்படி சேவக மனப் பாங்குடன் மக்களுக்கு பணியாற்ற வேண்டுமென்று, சீடர்களுக்குச் செய்து காட்டினார்.

இயேசு பிரான் பெற்றோரைக் கனம் பண்ண வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். சத்ய சாயி பாபா வேத வாக்கான தாய் தெய்வம், தந்தை தெய்வம், ஆசிரியர் தெய்வம், விருந்தாளி தெய்வம் என்பவற்றை வலியுறுத்தியுள்ளார்.

இயேசு பிரான் தன்னைப் பின் தொடரும் சனக்கூட்டத்தைக் கண்டு கலீலியோ கடற்கரையிலுள்ள மலைச் சரிவில் ஏறி அங்கே உட்கார்ந்தார். அவர் கூறியதாவது, (மலைப் பிரசங்கம் மத்தேயு 4,5)

- மனந்திரும்புங்கள், பரலோக அரசு சமீபத்திலுள்ளது.
- என்னைப் பின்பற்றுங்கள். உங்களை மனிதரைப் பிடிக்கும் மீனவராக்குவேன்.
- ஆவியில் தாழ்மையுள்ளோர் ஆசீர் வதிக்கப்பட்டவர்கள். பரலோக அரசு அவர்களுக்கே உரியது.
- துயரப்படுபவர்கள் ஆசீர்வதிக்கப்பட்ட வர்கள். அவர்கள் ஆறுதல் பெறுவார்கள்.
- சாந்தம் உள்ளவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். அவர்கள் பூமியை உரிமையாகப் பெற்றுக் கொள்வார்கள்.
- நேர்மையை நிலை நாட்ட பசியும் தாகமும் உள்ளவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். அவர்கள் நிறைவு பெறுவார்கள்.
- இரக்கம் நிறைந்தவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். அவர்களுக்கு இரக்கம் காட்டப்படும்.
- உள்ளத்தில் தூய்மை உள்ளவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்கள் இறைவனைக் காண்பார்கள்.
- சமாதானம் செய்கிறவர்கள் ஆசீர்வதிக் கப்பட்டவர்கள். அவர்கள் இறைவனின் மகன்கள் என அழைக்கப்படுவார்கள்.
- நேர்மையின் நிமித்தம் துன்புறுத்தப் படுபவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். பரலோக அரசு அவர்களுக்குரியதே.

என் பொருட்டு மக்கள் உங்களை இகழும் பொழுதும், துன்புறுத்தும் பொழுதும், உங்களுக்கு எதிராக பலவிதமான பொய்களை சொல்லித் தீமைகள் விளை விக்கும் போதும் நீங்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்.

இயேசு பிரான் மத்தேயு 15இல் "மனிதனுடைய வாய்க்குள் போவது அவனை அசுத்தம் ஆக்காது. ஆனால் அவனது வாயிலிருந்து வெளியே வருவது எதுவோ அதுவே அவனை அசுத்தம் ஆக்கும்" என்றார். அவர் பேதுரு கேட்டதற்கு விளக்கம் கொடுத்தார். வாயினுள் போவது எல்லாம் வயிற்றினுள் சென்று வெளியே போய்விடுகிறது. வாயிலிருந்து வெளியே வருகின்றவை இதயத்தில் இருந்தே வருகின்றன. இதிலிருந்தே தீய சிந்தனைகள் எழுகின்றன" என்றார். சத்ய சாயி பாபா உட்போகும் உணவே எண்ணத்தை நிர்ணயிக்கிறது என்றார். ஆகவே மாமிசம், மது அருந்துதல், புகைத்தல் ஆகியவற்றை விடவேண்டும். உட்செல்லும் உணவு என்றால் எமது புலன்கள் ஊடாக உட்செல்லும் அனைத்தையுமே குறிக்கிறது என்று விளக்கம் கொடுத்தார்.

இயேசுபிரான் மத்தேயு 23இல் தனது முக்கிய இரண்டு கட்டளைகளைக் கூறியுள் ளார். முதலாவது **"இறைவனிடத்தில் இதய பூர்வமாக அன்பாயிரு, இரண்டாவது நீ உன்னில் அன்பாயிருப்பது போல் அயலவனிலும் அன்பாயிரு"** என்பனவேயாகும். சத்யசாயி பாபா எல்லோரும் தெய்வீகமானவர்கள். இறைவனே எங்கும் உள்ளார். மற்றவனில் இறைவனைக் காண வேண்டும். ஆகவே தன்னலமற்ற சேவையைத் தெய்வீக அன்புடன் செய்யவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இயேசு பிரானைக் கடவுளை நிந்திப்பவராக சாட்சிகள் ஏற்படுத்தி சிலுவையில் அறைந்தார்கள். எவ்வளவு துன்பத்தின் மத்தியிலும் தன்னைத் துன்பப் படுத்துவோரை ஆசீர்வதிக்கும்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதாவைக் கேட்டுக்கொண்டார். இதுதான் மன்னிப்பின் உச்ச நிலையாகும். சத்யசாயி பாபாவும் எவ்வளவோ வியாதிகளுக்கு ஆளாகினார். பலரின் வியாதிகளைக் குணமடையச் செய்த தெய்வீக மகான்கள் தங்களுக்கு ஏற்பட்ட வியாதி, விபத்து, துன்பத்தில் இருந்து விடுபட தங்களது தெய்வீக சக்தியை உபயோகிப்பதில்லை யென சத்ய சாயி பாபா கூறியுள்ளார்கள். அவர்களும் மக்களின் துன்பங்களைத் தாங்களே எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் தேகாபிமானத்திலிருந்து ஆத்மா (பரிசுத்த ஆவி) அபிமானத்தில் வாழ்கிறபடியால் உடலின் வலி துன்புறுத்துவதில்லை. அவர்களுக்கு எள்ளளவு தன்னலமுமில்லை என்றும் விளக்கியுள்ளார். மூன்றாவது நாள் இயேசு பிரான் உயிர்த்தெழுந்து கலிலீயோவில் சீடர்களைச் சந்தித்து அவர்களுக்கு சக்தியை அன்பளித்து பல திசைகளுக்கும் சென்று போதனையைப் பரப்பச் சொன்னார். மகான்களை பூஜிப்பது முக்கியமல்ல, அவர்களின் போதனை களை உள்வாங்கி வாழ்க்கையில் பின் பற்றுவதே முக்கியமென்று சத்யசாயி பாபா கூறியுள்ளார்.

இயேசு பிரான் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு கல்லறையில் அவரின் உடம்பு ஒரு சேலையால் சுத்திவர மூடப்பட்டது. அச் சேலையில் அவரின் முகம் பதிந்திருந்தது. (Shroud of Turin) இதைப் பின்பு படம் எடுத்து சத்யசாயி பாபா முன்னிலையில் காட்டப்பட்ட போது, அவர் அப்படத்தை தனது சக்தியால் சீராக்கிக் கொடுத்தார். அதன் புகைப்படங்கள் உள்ளன.

கடைசியாக இயேசு நாதர் தனது பிதாவைச் சென்றடைந்தார்.

இயேசுநாதர் சிலுவையிலிருந்த ஒரு சின்னத்தை சாயி பாபா தனது சக்தியால் படைத்து ஜோன் ஹிஸ்லொப் என்பவருக்குக் கொடுத்தார். அவர்கள் அதைப் பெரிது படுத்தி படமாக எடுத்துள் ளார்கள். இயேசு பிரானின் காலத்தில் படம் எடுக்கும் வசதியில்லை.

மறுபிறப்பைப் பற்றி பலர் ஆராய்ச்சி செய்துள்ளார்கள். மறு பிறப்பைப் பற்றி இயேசுவின் கூற்று புராதன விவிலிய நூலில் இருந்த தாகவும், அது ரோம சக்ர வர்த்தி யஸ்ரினியன் கொன்ஸராஸ்ரி நோபிளில் நடந்த இரண்டாவது திருச் சபைகளின் மாநாட்டில் நீக்கியதாகவும் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது.

(இது வத்திக்கன் புராதன நூல்களின் அறையில் வைக்கப் பட்டுள்ளது).

மறுபிறப்பும் கர்மவினை விதியும் ஒன்றாகப் பிணைந்துள்ளன. புதிய ஏற்பாட்டில் மறு பிறப்பைப் பற்றி மேலோட்டமான குறிப்பு மார்க் 6 இல் "எலிஜா என்ற தீர்க்கதரிசியே ஸ்நான யோவான் ஆக வந்துள்ளார்" என்று உள்ளது. விதைத்ததையே அறுவடை செய்வீர்கள் என்ற கூற்று கர்ம விதியைக் குறிக்கிறது.

சிலுவைச் சின்னத்திற்கு சாயி பாபா கொடுத்த விளக்கம் யாதெனில், மேல் கீழான கோடு அகங்காரத்தைக் குறிக்கிறதென்றும் குறுக்கேயுள்ள கோடு அதை அழித்தால் பிதாவை அடையலாம் என்பதேயாகும்.

1996 கிறிஸ்மஸ் தினத்தன்று சத்யசாயி பாபா ஒரு மிகச் சிறிய புத்தகத்தை வரவழைத்துக் காட்டினார்



1530 கி.பி. வருடங்கள் வரை கிடைத்த சகல தகவல்களும் அப்புத்தகத்தில் உள்ளன. இது இங்கி லாந்திலுள்ளது. ருஷ்சியர்கள் இதை சிறிய புத்தகமாக மாற்றி கருங்கடலிலுள்ள ஆர்மெனியாவில் யெரீவாவிலுள்ள காட்சியகத்தில் வைத்துள்ளார்கள். இதில் பக்கங்களைக் குறிக்கும் நூல் துண்டுகளில் ஏனைய மதங்களில் இருந்து குறிப்புகள் அச்சடிக்கப்பட்டுள்ளன.

1993ம் ஆண்டு அன்பன் பீற்றர் பிப்ஸ் (Peter Phipps) சத்ய சாயி பாபாவிடம் தங்களின் செய்தியை எவ்வாறு கிறிஸ்தவ மக்களிடம் அறிவிக்கலாம் என்று கேட்டபோது அவர் சொன்னார்: "சாயி பாபாவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இயேசு பிரானைப் பற்றிச் சொல். இயேசு எங்கும் வியாபித்திருக்கும் அன்பையே போதித்தார் என்று சொல். கிறிஸ்தவ மக்கள் பல குழுக்களாகப் பிரிந்துள்ளார்கள். ஒவ்வொரு குழுவும் தாங்கள் சொல்வதே சரியென்று நினைக்கிறார்கள். அவர்கள் இறைவனைச் சிறிதாக்கிக் கொள்கிறார்கள். இயேசு பிரான் பிரபஞ்சத்திற்கே உரியவர் என்பதை மறக்கக்கூடாது".

டாக்டர் **R.** கணேசமூர்த்தி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகக் கதைகள்



கதை: 1

99 கழகம் (99-Club)

ஒருஅரசன் இருந்தான். அவன் தன்னிடமுள்ள செல்வம், வசதிகள் உள்ள வாழ்வைப் பற்றித் திருப்தி கொண்டிருக்க வேண்டும். ஆனால் அரசனுக்கோ நிம்மதி இல்லை. அவர் எங்குசென்றாலும் மக்கள் மரியாதை அளித்தார்கள். விருந்துகள், களியாட்டங்கள் எல்லாவற்றிலும் பங்கு பற்றியும் ஏதோ ஒன்று இல்லை யென்ற நினைவேயிருந்தது.

ஒருநாள் வேளைக்கு எழுந்து, தனது அரண்மனையைச் சுற்றிப் பார்த்தார். தனது அறைக்குள் நுழையும் போது ஒரு சேவகன் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டு கடமைகளைச் செய்வதைப் பார்த்தார். இந்தச் சேவகனை தனது மண்டபத்திற்கு அழைத்து **எப்படி நீ மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதன் இரகசியத்தைச் சொல்** என்று கேட்டார்.

சேவகன் : அரசே நான் ஒருசேவகனே. ஆனாலும் மனைவியும் மக்களும் மகிழ்ச்சியாக வாழப் போதுமான ஊதியம் கிடைக்கிறது. வாழ்வதற்கு ஒரு இடமும் வயிராற உணவும் போதுமானதே. மனைவியும் பிள்ளைகளும் எனக்கு நல்ல உந்துதலையும் உற்சாகத்தையும் தருகிறார்கள். எனது உழைப்பில் திருப்தியாக வாழ்கிறார்கள். **அவர்களின் திருப்தியும் மகிழ்ச்சியுமே எனது மகிழ்ச்சிக்கு ஆதாரம்** என்றான்.

அரசன் சேவகனை அனுப்பிவிட்டு தனது அரண்மனை ஆலோசகரைக் கூப்பிட்டார். தனக்கு நடந்ததைக் கூறி தனக்கு எவ்வளவோ செல்வம் இருந்தும் திருப்தியில்லை. ஆனால் அச் சேவகனோ குறைந்த வருவாயுடன் மனத் திருப்தியும் மகிழ்ச்சியும் கொள்கிறான். இதனின் மர்மத்தைக் கண்டறிஎன்று கூறினார்.

அரண்மனை ஆலோசகர், அரசே அந்தச் சேவகன் இன்னும் 99,கழகத்தில் சேரவில்லை என்றான். அதுஎன்ன 99 கழகம்? என்பதை விளக்கும்படி கேட்டார். இதற்கு ஆலோசகர் அரசனைப் பின்வருமாறு செய்யச் சொன்னார். ஒருபையில் 99 தங்கக் காசுகளைப் போட்டு, சேவகன் வீட்டின் கதவடியில் வைத்து என்ன நடக்கும் என்பதைக் கவனிப்போம் என்று சொன்னார்.

அன்றிரவே 99 தங்கக் காசுகளைப் பையில் போட்டு சேவகனின் வாசலில் வைக்க உத்தர விட்டார். அரசனுக்கு, ஆலோசகர் 100 க்குப் பதிலாக ஏன் 99 காசுகளை வைக்கச் சொன்னது புதிராயிருந்தது.

சேவகன் அதிகாலை எழும்பி வீட்டுக் கதவைத் திறந்ததும் பையைக் கண்டான். அதற்குள் என்ன இருக்கிறதென்பதை அறிய வீட்டிற்குள் எடுத்துச் சென்று திறந்து பார்த்தான். அவன் மகிழ்ச்சி தாங்காது மனைவியைக் கூப்பிட்டு தங்கக் காசுகளைக் காண்பித்தான். பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசையில் பரவி எண்ணிப் பார்த்தான். 99 நாணயங்கள் இருப்பதை உணர்ந்து ஒரு நாணயம் எங்கு ஒழிந்துள்ளதென திருப்பி திருப்பி எண்ணினான். யாரும் 99 போட மாட்டார்களே. 100 தானே போட்டிருப்பார்கள். அந்த ஒரு நாணயத்தை வீடுமுழுவதும் தேடினான். வளவிலும் தேடினான். களைத்துப் போய் தான் எப்படியும் கடினமாக உழைத்து நூறாவது நாணயத்தைச் சேர்க்கத் தீர்மானம் எடுத்தான். அடுத்தநாள் காலை மனம் குழம்பிய நிலையில் எழுந்து மனைவி மக்களுடன் கோபம் காட்டி வேலைக்கும் நல்ல மகிழ்ச்சியான மனதுடன் செல்லவில்லை.

சேவகனின் சடுதியான மன மாற்றத்தை கண்டு அரசன் அதிசயித்தான். தனக்கு கிடைத்த 99 நாணயங்களினால் மகிழ்ச்சி யடைவதை விட்டு இல்லாத ஒரு நாணயத்திற்காக ஏன் அவலப்படுகிறான் என்று விளக்குமாறு ஆலோசகரிடம் கேட்டார். ஆலோசகர் அரசே அந்தச் சேவகன் 99 கழகத்தில் சேர்ந்து விட்டான். இக் கழக அங்கத்தவர்கள் தமக்குக் கிடைத்த 99 க்குநன்றியுடன் திருப்தி கொள்ளாது மேலாக வேண்டிய ஒரு நாணயத்திற்காக எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள்? என்று கூறினார்.

எங்களுக்குக் கிடைத்தவற்றிற்கு நன்றி கூறி வாழ வேண்டும். எமக்குக் கொஞ்சம் வசதி கூடக்கிடைத்து விட்டால், மேலும் மேலும் தேட வேண்டும் என்ற பேராசை எழுந்து விடும். இதற்காகக் கடின உழைப்பை விடவேண்டு மென்று எடுக்கக் கூடாது. கடினஉழைப்பில் ஈடுபட்டாலும் மனதிலுள்ள திருப்தியையும் மகிழ்ச்சியையும் நன்றியுணர்வையும் இழக்கக்கூடாது. இதுதான் 99 கழகத்தில் சேருவதென்பதன் விளக்கம் என்றுஆலோசகர் சொன்னார்.

இதை உதாரணத்துடனும் செயல் முறையாலும் விளங்கிய அரசன் எப்போதும் திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும் என்ற சங்கல்ப்பம் பூண்டான்.

ஆசைகளைப் பூர்த்தி செய்வதிலும் பார்க்க ஆசைகளைக் கட்டுப்படுத்துவதில் மகிழ்ச்சி அதிகம் உண்டு.

நன்றியுணர்வு, நிம்மதி, மகிழ்ச்சி எல்லாம் எமக்குள்ளே இருக்கின்றன. வெளிப் பொருட்களில் அல்ல. இறைவனுடன் இணைந்திருக்க வேண்டும்.

நன்றி: நவசாரதி - டிசெம்பர் 2005
H2Hவெளியிட்டது.

கதை: 2

நல்லசமாரியன்

(Good Samaritan) - (லுக்கா 10)

ஒரு முறை நீதிச் சட்டநிபுணர் ஒருவர், இயேசுவைச் சோதிக்கும்படி போதகரே நித்தியவாழ்வைப் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். இயேசு நீதிச் சட்டத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பதை வாசிக்கவும் என்றார். அதற்கு சட்ட நிபுணர் உன் இறைவனாகிய கர்த்தரிடம் அன்பாயிரு. உன் முழு இதயத்தோடும் உன் முழு ஆத்மாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழு மனதோடும் அவரில் அன்பு காட்ட வேண்டும். அத்துடன் நீ உன்னில் அன்பாயிருப்பது போல் உன் அயலவனிலும் அன்பாய் இரு என்று கூறினார். இயேசு நீ சரியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் சொன்னாய். அப்படியே செய். அப்பொழுது நீ நித்திய வாழ்வையடைவாய் என்றார்.

அப்பொழுது நிபுணர் இயேசுவிடம் என் அயலவன் யார்? எனக் கேட்டார். அதற்கு இயேசு பின்வரும் கதையைச் சொன்னார்.

யூதன் ஒருவன் ஜெருசலேமிலிருந்து எரிக்கோவிற்குப் போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது கள்வர்கள் அவனுடைய உடை களைக் கழற்றி அவனை அடித்து அரை உயிராய்ப் போட்டுப் போயுள்ளார்கள்.

மதகுரு ஒருவர் அவ்வழியால் வந்தார். தெருவில் கிடந்தவனை விலகிச் சென்றார். அப்படியே ஒருலேவியனும் அவனைக் கண்டு மறு பக்கமாய் போய்ச் சென்றான். அவ்வழியால் பயணம் செய்தசமாரியன் அவன் மேல் அனுதாபம் கொண்டான். காயங்களில் எண்ணெயும் திராட்சை ரசமும் ஊற்றி கட்டி தனது கழுதையின் மேல் இருத்தி அருகிலுள்ள சத்திரத்தில் கொண்டு போய்ப் பராமரித்தான்.

மறுநாள் சத்திர உரிமையா ளரிடம் போதுமான பணத்தைக் கொடுத்து அவன் சுகமாகும் வரை பராமரிக்கச் சொல்லி கடன் இருந்தால் தானே கட்டுவதாகச் சொல்லியும் சென்றான்.

இந்த மூவரிலும் யார் காயப் பட்டவனுக்கு அயலவனாய்ச் செயற் பட்டார்? அதற்கு நிபுணர் காயம் பட்டவன் மேல் இரக்கம் காட்டியவனே என்றார். அப்பொழுது போ, நீயும் அப்படியே செய் என்று கூறினார்.

உன்னைப்போல் அயலவனையும் நேசி





கதை: 3

நிகழ்காலமே (இக்கணமே) தெய்வீகமானது

வனாந்தரத்திலே மூன்று பேர் குதிரையில் பயணித்தார்கள். வறண்டு போன ஆற்றைக் கடக்கும்போது ஒரு குரல் கேட்டது, "நில் லுங்கள், குதிரையிலிருந்து இறங்கவும். மண்ணில் இருக்கும் சில கற்களை எடுத்து உங்கள் இருப் புப் பையில் போடுங்கள்". அவர்களும் அப்படியே செய்தார்கள். குரல் மீண்டும், "நான் சொன்னபடி செய்தீர்கள். நாளை காலை நீங்கள் மகிழ்ச் சியையும் துக்கத்தையும் அனுபவிப்பீர்கள்" என்று சொன்னது.

அவர்கள் வியப்பில் ஆழ்ந்து தமது பயணத்தை தொடர்ந்து, சூரிய உதயத்தின்போது பைகளில் கைவிட்டுப் பார்த்தார்கள். அக் கற்களெல்லாம் இரத்தினக்கற்களாக மாறியிருந்தன. அவர்களுக்கு அப்போது கையிலுள்ள கற்களினால் மகிழ்ச்சியும் இன்னும் அதிகமாக கற்களை எடுக்கவில்லையே என்ற கவலையும் இருந்தது. இறைவன் காலத்தை எமக்கு அளித்துள்ளார். ஒரு வினாடியையும் வீணாக்கக்கூடாது. நாம் நிகழ் காலத்தில் வாழப் பழக வேண்டும். நிகழ்காலமே தெய்வீகம். இந்த உணர்வுடன் வாழ வேண்டும்.

பாலவிகாஷ் சஞ்சிகை, டிசெம்.1998
மும்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் நிறைவு ஒழுக்கம்

உலகிலுள்ள செல்வங்கள் அனைத்திலுமே சிறந்து விளங்குவது கல்விச் செல்வம் ஆகும். இது பொன், பொருள் முதலிய செல்வங்களைப் போல் பங்காளிகளாலும் கள்வர்களாலும் களவாடப்படாததும் நெருப்பு, வெள்ளம், காற்று போன்ற வற்றால் அழிக்க முடியாததும் ஆகும். இதனை நாம் எந்த வயதிலும் எந்த காலத்திலும் கற்றுக் கொள்ளலாம். இது எல்லை இல்லாததும் கொடுத்தாலும் குறையாததும் கொடுக்கக் கொடுக்கப் பெருகுவதும் ஆகும். பொருட்செல்வம் ஆனது ஒருவரிடம் தங்கி நிற்காது ஆனால் கல்விச் செல்வம் அவர் இறக்கும் போதும் அவருடன் இணைந்து இருப்பதாகும். பொருட் செல்வத்தை ஈட்டும் போது பலருடன் பகை ஏற்படலாம் ஆனால் கல்விச்செல்வம் பகைவரையும் நண்பராக்கும். கல்வியானது ஒவ்வொரு வருடைய வாழ்க்கையிலும் மிகவும் முக்கியமானது என்பதனை ஔவையாரும் "பிச்சை புகினும் கற்கை நன்றே" என நமக்கு நன்கு உணர்த்தி யுள்ளார்.

முற்காலத்திலே குருகுலக் கல்வியில் இளவரசனாக இருந்தாலும் இல்லாதவனாக இருந்தாலும் எல்லோரும் மாணவர்களே! குருவின் கட்டளைக்கு கீழ்ப்படியும் மாணவனுக்கே குருகுலம். அங்கு எல்லோரும் சமம். அங்கேயே இருந்து எல்லா வேலைகளையும் எல்லோரும் செய்ய வேண்டும். அங்கிருக்கும் மாணவர்கள் கல்வி, கேள்வி, வீரம், பண்பு, பணிவு, ஒழுக்கம்

அனைத்தையும் கற்றுச் சிறந்த மனிதனாய் வெளி வந்தார்கள்.

ஆனால் இன்றைய நவீன உலகின் சமுதாயம் கல்வி தான் சிறந்த செல்வம் என்பதனை மாறிப்புரிந்து கொண்டுள்ளனர் அதாவது அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் தான் அதீத திறமைசாலிகள் என்ற எண்ணங்கள் உருவாகிக் கல்விக் கூடங்கள் வணிக மயமாக்கப்பட்டு விட்டன. இதனால் நன்கு படித்த ஒழுக்கக் குறைவான மனிதர்களால் சமுதாயத்தில் குழப்பம் ஏற்படுகிறது. இதன் காரணமாக மாணவப் பருவத்தினரிற்கு தீவிர ஒழுக்கக் கட்டுப் பாட்டினை பழக்கப்படுத்தி சுயகட்டுப் பாடான சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எனவே நாம் வழமையான உலகியல் கல்வியுடன் ஒழுக்கத்தையும் எமது சிறு வயதிலிருந்தே கற்று நல்ல பழக்கங்களையும் பண்புகளையும் பழக்கப் படுத்திக்கொள்ள வேண்டும். உதாரணங்களாக சூரிய உதயத்திற்கு முன் எழுதல், பெற்றோரை பேணுதலும் வணங்குதலும், கடவுளை வணங்குதல், ஆசிரியரிடம் அன்பும் மரியாதையும் உள்ளவாறு நடந்து கொள்ளுதல், பிற உயிர்க்குத் துன்பம் விளைவிக்காமை, சாதி, சமய, இன வேற்றுமை பாராமை, உண்மை பேசுதல், நல்லோர் சேர்க்கை என்பன அமைகின்றன. ஒழுக்கம் என்பது யாரும் இல்லாத போதும் நம் செயல்கள் சிந்தனைகள் பேச்சுக்கள் நேர்மையாக இருப்பதே ஆகும். இதுவே மனச்சாட்சியின் வடிவம் ஆகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சேவைத் திட்டம்

சத்திய சாயி பாடசாலை -மானிப்பாய் - யாழ்ப்பாணம்

கல்வி சேவைத்திட்டத்தை நோக்காக கொண்டு இலங்கையின் முதலாவது சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டு 1 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. 180 பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள்.

இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: +94 21 225 5086
E mail - info@ssiosrilanka.org
saischool@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org

மேலும் பாபா கூறுகிறார். கல்வியானது நல்வாழ்க்கை அமைக்க ஏற்பட்டது என்றும் உலகியல் வாழ்க்கை அதாவது பணம் சம்பாதிப்பது, ஆடம்பர வாழ்வு வாழ்வதற்காக மட்டும் அல்ல என்றும் மனிதனின் உள் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தவும், ஒருவரது நீதிநெறி செல்வத்தையும், ஆன்மீக வளத்தையும் போஷித்து மனிதனின் உள் மறைந்திருக்கும் திறமைகள் முறையாக வளர்ச்சியடையவும் மனிதச்சிறப்புக்கள் மலர்வதுமாக அமைய வேண்டும் என்றும் எமது தார்மீக வாழ்க்கைக்கு எது உதவுகிறதோ அதற்கான துறைகளில் தர்ம வழியில் நடப்பதே ஒழுக்கமான கல்வியின் இரகசியமாகும். எனவே கல்வியின் நிறைவு ஒழுக்கத்தில் தான் தங்கியுள்ளது என்பது நமக்கு நன்கு புலனாகிறது.

ஜெய் சாயிராம்

கீர்த்திகா பகீரதன்
பாலவிகாஸ் மாணவி - பிரிவு 4
யாழ் நிலையம்

நற்சிந்தனை (றேடியோசாயி)

இக் கலியுகத்தில் பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு இறைநாமமே வழியாகும். சிறிய பதங்களான ராமா, கிருஷ்ணா எப்படிப் பாரிய உலக வாழ்வான கடலைக் கடக்க உதவுமென்று நீங்கள் சந்தேகிக்கலாம்.

பெரும் சமுத்திரத்தை சிறிய படகின்மூலமும் நெடுந்தூர இருள்மயமான காட்டை சிறிய விளக்கின்மூலமும் கடந்துள்ளார்கள். இறைநாமங்கள் சிறியதாயினும் ஓம் என்ற மிகச் சிறந்த பதமும் அபாரமான சக்தி கொண்டவை. படகு கடலளவு பெரிதாக இருக்கத் தேவையில்லை. பூமியின் அடியில் இருக்கும் நீரை வெளிக் கொண்டுவருவதற்கு சிறிய துவாரமே போதும். பெரிய பாறைக் கல்லிலிருந்து அழகிய சிலையை வெளிப்படுத்துவதற்கு சிறிய உளியே போதும். பிரகலாதனின் நம்பிக்கையை உறுதி செய்ய தூணிலிருந்து நரசிம்ம அவதாரம் வெளிப்பட்டது. இறைவன் ஆனந்தமயமானவன். இறைநாமத்தின் மூலம் அவரை ருசித்துப் பார்க்கலாம். அவர் ஸத்-சித்-ஆனந்தமே ஆவார்.

அருளுரை:
13.01.1965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டமான நேரங்களில் மகிழ்ச்சியாக எப்படி இருக்க வேண்டும்?

சாயி சகோதரி.அபர்ணா முரளியுடனான சிறப்பு சத்சங்கத்தின் தொகுப்பு.

(பகவானின் 95.ஆவது அவதாரதின நிகழ்வின் ஒரு பகுதியாக நடைபெற்ற சுவாமியின் அனந்தபூர் பல்கலைக்கழகப் பட்டதாரி சகோதரி அபர்ணா முரளி அவர்கள் இலங்கை பக்தர்களுக்காக தமிழில் நேரலையில் 26.11.2020 அன்று நிகழ்த்திய சத்சங்கத்தின் தொகுப்பு.)

ஓம் ஸ்ரீ ஸாயிராம்!
என் அன்பையும் நன்றியையும் எனது பகவானின் பொற் கமலப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைய சத்சங்கத்தின் தலைப்பு கஷ்டமான நேரங்களில் மகிழ்ச்சியாக எப்படி இருக்க வேண்டும்? இது மிகவும் அற்புதமான தலைப்பு ஆகும். முதலில் நான் இந்தத் தலைப்பைக் கேட்ட பொழுது ஒரு கேள்வி எழுந்தது. கஷ்டமான நேரங்களில் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமா? பிறகு சிந்தித்தேன், கஷ்டமான நேரங்களில் அமைதியாக இருக்க வேண்டும், மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதை முதல் தடவையாக கேள்விப்பட்டேன். அதனுடன் சுவாமியின் இந்த வருட 95ஆவது பிறந்தநாளின் கருப்பொருளான இறைவனுடன் ஒன்றிணைந்திருப்பதே ஆனந்தம்"(Happiness is union with God). இந்த இரண்டையும் ஒன்றுடன் ஒன்று கோர்த்துப் பார்த்தால் பகவான் அற்புதமாக புது அர்த்தங்களைக் கொடுத்தார். முதலில் "கஷ்டம் என்றொரு அனுபவம் எமக்கு வரும் பொழுது ஏன் அது எமக்கு சோகத்தை அளிக்கின்றது?" என்ற கேள்வி வருகின்றது. அத்துடன் இரண்டாவதாக "இறைவனுடன் ஐக்கியமாகவிருப்பதே ஆனந்தம்" என்றால் ஆனந்தமாகவிருப்பது தான் பகவானுடன் ஒன்றிணைந்திருப்பதைக் கொடுக்கின்றதா? இல்லையெனில் பகவானுடன் கூடவிருப்பது தான் ஆனந்தத்தை அளிக்கின்றதா? என்ற மற்றுமொரு கேள்வி. மூன்றாவது கேள்வி "பகவான் எங்கே இருக்கின்றார்?" என்ற மற்றுமொரு கேள்வி. இப்போது முதல் கேள்விக்கு சென்றால் "கஷ்டம் வரும் போது எமக்கு பயம் ஏன் ஏற்படுகின்றது அல்லது தைரியம் ஏன் இல்லை? என்ற கேள்வி எழுகின்றது.

பகவான் தனது அருளுரையில் ஒரு முறை கூறினார். ஒரு பயணி காட்டினூடாக செல்லும் போது Torch light ஐ பிடித்துக் கொண்டு செல்கின்றார். Torch light இன் வெளிச்சம் இரண்டு அடி வரைக்கும் தான் தெரியும், ஆனால் காட்டைக் கடந்து செல்ல வேண்டுமெனில் நூறு கிலோ மீற்றர்கள் வரை செல்ல வேண்டும். அப் பயணி "ஐயையோ இரண்டு அடி வரை வெளிச்சத்தை தரக் கூடிய Torch light ஐ கொண்டு நான் எவ்வாறு நூறு கிலோமீற்றர் வரை பயணிக்கப் போகின்றேன் என்ற மனப்பயம் கொண்டார். அப்போது அவருடன் வந்த இரண்டு சக பயணிகள் "இப்போது ஏன் நீங்கள் அச்சம் கொள்கின்றீர்கள்?" என்று கேட்டனர். அப்போது இந்தப் பயணி கூறினார். இந்த Torch light ஐ வைத்துக் கொண்டு நூறு கிலோமீற்றர் வரை கடந்து போக வேண்டும். நான் எப்படி போகப்போகின்றேன் என்று தெரியவில்லை. அது தான் ஒரே பயமாக இருக்கின்றது" என்றார். அப்போது சக பயணிகள் கூறினார்கள். "நூறு கிலோமீற்றர் வரை வெளிச்சத்தைக் காட்டுவதற்கு எந்தவொரு Torch light உம் இல்லை. இரண்டு அடி தெரிகின்ற வெளிச்சத்தைப் பயன்படுத்தி மெல்ல மெல்ல நீங்கள் நூறு கிலோமீற்றரைக் கடந்திடலாமே! ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயப்பிடுகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அப்போது தான் அந்த பயணிக்கு சரி நமக்கு நூறு கிலோமீற்றர் கடப்பதற்கு நூறு கிலோமீற்றர் வரைக்கும் வெளிச்சத்தைக் காட்டுகின்ற Torch light தேவையில்லை. இரண்டு அடி வரைக்கும் வெளிச்சத்தைக் காட்டுகின்ற Torch light ஐப் பயன்படுத்தி மெது மெதுவாக இந்தப் பாதையை கடந்திடலாம் என்று மனதில் தைரியம் வந்தது. அப்போது பகவான் கூறினார், அந்த Torch light தான் "இறைவனின் பெயர்" , நாம் பஜனை பாடும் போதும் அஷ்டோத்திரம் சொல்லும் போதும் நாம் இரண்டு அடி தூரம் போகின்றோம். நமக்கு எந்தவொரு கஷ்டம் வரும் போதும் சரியான பாதையொன்றை தெரிவு செய்வதிலே சந்தேகம் ஏற்படும் போதும் பகவான் சொல்கின்றார், "இறைவனின் பெயரை" சொல்ல வேண்டும். ஏனெனில் நாம் இறைவனின் பெயரை எடுத்தால் அந்த Torch light போல இரண்டு அடி தெரியும், இரண்டு அடி போனால் இன்னும் இரண்டு அடி தெரியும், அதன் பின்பு இன்னும் இரண்டு அடி. இப்படி கடவுள் நாமத்தை சொல்லி சொல்லி நமக்கு என்ன துன்பம் வந்தாலும் அதைக் கடந்து வர முடியும். இவ்வாறு பகவான் கூறினார். இது ஒரு எளிமையான உதாரணம். ஆனால் அதை சிந்தித்து பார்க்கும் போது அது மிகவும் பயனுள்ள விடயம் என்பது புலப்படும். நாம் அதை முயற்சித்துப் பார்க்க வேண்டும்.

இன்னுமொரு உதாரணம் சுவாமி கூறினார், இலங்கை ஒரு தீவு.அங்கு நிறைய படகுகள் இருக்கும். அந்த தீவை சூழ்ந்து இருக்கின்ற சமுத்திரம் ரொம்ப பெரிய சமுத்திரம். சுவாமி சொன்னார், இவ்வளவு பெரிய சமுத்திரம் இருக்கின்றதே ஒரு தீவிலிருந்து இன்னுமொரு தீவிற்கு/ நாட்டிற்குப் போக வேண்டு மென்றால் ஒரு சின்ன படகு இருந்தாலே போதும். அந்த சமுத்திரத்தின் அளவுக்கு ஏற்ப ஒருபடகு இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரு சிறிய படகே போதும். அந்த சிறிய படகு என்பது "இறைவனின் நாமம்".அது எம்முடன் இருக்கும் போது எவ்வளவு பெரிய சமுத்திரமாக இருந்தாலும் சரி, நாங்கள் கரையேறலாம். அந்தவொரு நம்பிக்கை நமக்குள்ளே உண்டாக வேண்டும். "முதலில் நம்பிக்கை இருக்க வேண்டும். அதன் பின்பு அந்த நம்பிக்கைக்கு ஏற்றாற் போல ஒரு அனுபவம் ஏற்படும்" என்று சுவாமியே சொல்லியிருக்கின்றார். இப்படி சுவாமி சொன்னதை நாங்கள் முதலில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதன் பின்பு ஒரு துன்பம் வரும் போது நாங்கள் சுவாமி சொன்னதை ஒருமுறை முயற்சித்துப் பார்க்க வேண்டும்.

இதற்கு உதாரணமாக நான் என்னுடைய சொந்த அனுபவத்தை பகிர்ந்து கொள்கின்றேன். அனந்தபூர் கல்லூரியில் எனது கற்கை இறுதி ஆண்டின் விளையாட்டு போட்டி நிகழ்வில் சுவாமியின் வருகையின் போது முதலில் சாயிகீதா எனும் சுவாமியின் பக்தையான பெண்யானையும், அதைத் தொடர்ந்து வேத பாராயணம் செய்பவர்களும் அதைத் தொடர்ந்து பஞ்சாபி நடனம் செய்யும் சகோதரர்களும் அவர்களைத் தொடர்ந்து பாண்ட் வாத்தியக் குழுவினரும் அவர்களைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் சாகசங்களைப் புரிய அனந்தபூர் கல்லூரியின் மாணவிகளும் அவர்களைத் தொடர்ந்து சுவாமியும் வருகை தந்தார். அதிலே மோட்டார் சைக்கிள் சாகசங்களைப் புரிய எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. சுவாமியை அழைத்துக் கொண்டு விளையாட்டு மேடை வரை செல்லும் போது மோட்டார் சைக்கிளை மிக மெதுவாக அதாவது பூச்சிய கிலோமீற்றர் அளவில் செலுத்த வேண்டும். நான் அந்த சமயத்தில் சுவாமிக்கு மிக அருகாமையில் அதாவது எனது மோட்டார் சைக்கிள் கண்ணாடியில் சுவாமியின் விம்பத்தை தெளிவாகப் பார்க்கக் கூடிய அளவிற்குஅருகாமையில் இருந்தேன். சுவாமி எப்பொழுதும் பெண் மாணவிகளை தமது கண்காணிப்பில் மிகவும் பாதுகாப்புடன் வைத்திருப்பார். மோட்டார் சைக்கிள் சாகசங்களைப் புரியவிருந்த நாங்கள், எமக்களித்த மோட்டார் சைக்கிளில் முதல் நாள் மாலை பயிற்சிகளை மேற்கொண்டோம். அப்போது எந்தவிதமான தடைகளும் ஏற்படவில்லை. சுவாமியுடன் விளையாட்டு அரங்கத்திற்கு செல்லும் வழியில் சமிக்ஞை ஒன்று கிடைத்த பின்பே நாங்கள் மோட்டார் சைக்கிளை செலுத்த வேண்டும். சுவாமியிடமிருந்து சமிக்ஞை கிடைத்தவுடன் நான் மோட்டார் சைக்கிளை start செய்தேன். அப்போது சிறிது தூரம் பயணித்து விட்டு வண்டி நின்று விட்டது. நான் மீண்டும் கிக் செய்த பின்பு சிறிது தூரம் சென்று விட்டு மீண்டும் நின்று விட்டது. காரணம் எதுவுமே புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் அந்த மோட்டார் சைக்கிள் சுவாமி அளித்த புது மோட்டார் சைக்கிள்! இவ்வாறே வண்டி சிறிது தூரம் பயணிப்பதும் நிற்பதுமாக இருந்தது. எனக்குள் இவ்வாறான ஒரு அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்ற பயம் ஏற்பட்டது. அத்துடன் கோபமும் எழுந்தது. சுவாமியின் விம்பம் எனது கண்ணாடியில் தொடர்ந்து தெரிந்து கொண்டே இருந்தது. நாம் செல்லும் வழியில் சாயி சகோதரர் இருவர் கொடி பிடித்துக் கொண்டு எம்முடன் வந்து கொண்டிருந்தனர். அந்தக் கொடியின் மறைப்பினால் எனது பிரச்சினையைப் பார்வையாளர்கள் கவனிக்கவில்லை. ஆனால் என்னுடன் பயணித்த சகோதரிகளுக்கு எனது பிரச்சினை விளங்கியது. எனது அருகிலிருந்த சாயி சகோதரர் எனது பிரச்சனையை விளங்கிக்கொண்டு கூறினார்,"நீங்கள் காலைப் பயன்படுத்தி மோட்டார் வண்டியை தள்ளியே செல்லுங்கள்" என்றார். நானும் அவ்வாறே செய்தேன். எனக்கு கோபமும் அழுகையும் வந்தது. அதற்குப் பின் சுவாமி மேடையில் சென்று அமர்ந்தார். அதன் பின் நாங்கள் மோட்டார் சாகசங்கள் செய்ய வேண்டும் எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எனது அனைத்துக் கோபத்தையும் மொத்தமாகத் திரட்டி ஒரு கிக் செய்தேன் மோட்டார் சைக்கிள் Start ஆகியது. நாங்கள் மீண்டும் ஆரம்ப இடத்திற்கே வந்து நின்றோம். அங்கே எம்மைப் பயிற்று வித்த ஆசிரியை நின்றார். நான் அவரிடம் மன்னிப்புக் கேட்கச் சென்றபோது, அவர் என்னிடம் "ஒன்றும் பேசாதே" என்று கூறிவிட்டு சென்று விட்டார். எனக்கு மிகவும் அழுகை வந்தது. என்னுடைய நண்பி,அபர்ணா! என்ன நடந்தது? என்று கேட்க நானும் எனது அழுகையை அடக்க முடியாது அழுது விட்டேன் அப்போது அபர்ணா! நீ சுவாமியினுடைய நாமத்தை உச்சரித்தீரா? என்றுஅவர் கேட்டார்.அப்போது தான் நான் எனது தவறை உணர்ந்தேன். சுவாமி எனக்கு மிக அருகிலிருந்தும் சுவாமியைக் கூப்பிடவில்லையே! என்ற வருத்தமும் எழுந்தது. சாகசத்திற்கு தயாராகும் நிலையில் எனது நண்பி சுவாமி கொடுத்த மாலையை எனக்கு அணிவித்து "உன்னால் செய்ய முடியும்" என்று தைரியம் கூறினார். சாகசம் ஆரம்பித்த நிலையிலிருந்து முடியும் வரை "சாய்ராம் சாய்ராம் சாய்ராம் சாய்ராம் சாய்ராம் சாய்ராம் சாய்ராம் சாய்ராம் சாய்ராம் சாய்ராம்"என்று நாமத்தை மூச்சாக எண்ணி இடைவிடாது தொடர்ச்சியாக உச்சரித்துக் கொண்டே இருந்தேன். மோட்டார் சைக்கிள் ஒருதடவை கூட நிற்கவில்லை இது ஒரு அற்புதமான அனுபவமாக இருந்தது.

எந்தவிதமான கஷ்டம் வந்தாலும் எப்படி இந்த துன்பம் முடியப் போகின்றது என்று யோசித்துக் கவலை கொள்ளாது, இப்போது இந்த நிலைமையில் அடுத்த அடியை எவ்வாறு வைக்கப் போகின்றோம் என்பதிலேயே கவனம் செலுத்த வேண்டும். அடுத்து எந்தவிதமான கஷ்டம் வந்தாலும் ஒரு இரண்டு நிமிடம் விசுவாசத்துடன் இறைநாமத்தை நாமஸ்மரணை செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் உடனே ஒரு அமைதியான மனநிலை.. உணர்வு கிடைக்கும். இதன் மூலம் அப் பிரச்சினைக்குரிய தீர்வை சிந்தித்து எடுக்க முடியும். அனுபவமே எனது முதலாவது கேள்விக்கான பதிலாக அமைந்தது. கஷ்டமான காலத்தில் நாம் கடவுளின் நாமத்தை ஜெபிக்க வேண்டும். அத்துடன் "இறைவன் எம்முடனே இருக்கிறார் என்ற தைரியம் இருக்க வேண்டும்.

அடுத்து 10..12 வருடங்கள் கழித்து 2005இல்மீண்டும் சுவாமி எனக்கு ஒரு அனுபவத்தைத் தந்தார். அமெரிக்காவில் வேலை செய்யும் போது அதில் பல பிரச்சினைகள் எழுந்தன. அவை மிகுந்த மன வேதனையைத் தந்தன. ஒரு நாள் வேலை செய்து முடித்து காரில் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த போது இங்கே லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து புட்டபர்த்தியில் இருக்கும் சுவாமிக்கு கேட்கவேண்டும் என்பதற்காகச் மிகவும் சத்தமாகக் கூறினேன். சுவாமி! அன்று நான் மாணவியாக விருந்த போது நீங்கள் என் அருகில் இருந்தபோதிலும் நான் உங்கள் நாமத்தை சொல்ல மறந்து விட்டேன். ஆனால் இன்று இவ்வளவு தூரத்தில் இருந்தாலும் "ஜெய் சாய்ராம்!" என்று உங்களுடைய நாமத்தைச் சொல்கின்றேன் எனக்கு கஷ்டமாக இருக்கின்றது சுவாமி! நீங்கள் எங்கு இருக்கின்றீர்கள்? என்று சத்தமாகக் கேட்டேன். அப்போது எனக்கு முன்னால் பயணித்த BMW வெள்ளை நிற காரின் பின்னால் License plate இல் எழுத்துக்களாக "I AM WITHIN என்று இருந்தது. அதாவது "I AM WITHIN நான் உன்னுள்ளேயே இருக்கின்றேன் என்று சுவாமி மிக அழகாக எனக்குப் பதிலளித்தார். அதன் பின்னர் எனது மனதில் எந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பத்தையும் சமாளிக்கும் தைரியம் வந்தது. இரண்டு வருடங்களின் பின்னர் ஒரு முறை மீண்டும் அதே License plate உள்ள வாகனத்தை நான் parking இல் பார்க்க நேரிட்டது. அதை நான் புகைப்படம் எடுத்தும் வைத்துக் கொண்டேன். இது நான் கண்டது பிரம்மையல்ல என்பதை ஊர்ஜிதப்படுத்தியது. இது எப்போதும் சுவாமி என்னுடனேயே இருக்கின்றார் என்ற நம்பிக்கையைத் தந்தது. அது எனக்கு மிகுந்த தைரியத்தையும் அளித்தது. அத்துடன் சுவாமி சொன்ன ஒரு கதையை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என ஆசைப்படுகின்றேன். ஒருதடவை ஓர் அரசனுக்கு மூன்று கேள்விகள் எழுந்தன. அதை அவர் தனது தர்பாரில் பகிர்ந்து கொண்டார். அத்துடன் ஆஸ்தான புலவரையும் அக் கேள்விகளுக்குப் பதிலளிக்குமாறு கேட்டார். முதலாவது கேள்வி கடவுள் எந்த இடத்தில் இருக்கிறார்? இரண்டாவது கேள்வி,கடவுள் எந்தத்திசையை நோக்கிக் கொண்டு இருக்கிறார்? மூன்றாவது கேள்வி, கடவுள் என்ன செய்து கொண்டிருக்கிறார்? போன்ற கேள்விகளாகும். ஆனால் இந்தக் கேள்விகளுக்கு யாரிடமிருந்தும் திருப்திகரமான பதில்கள் கிடைக்கவில்லை. அரசன் ஆஸ்தான புலவரிடம் கேட்க அவராலும் பதில் கொடுக்க முடியவில்லை. அப்போது அரசன் சிறிது கால அவகாசம் கொடுத்து மறுநாள் இதற்குரிய சரியான பதிலை அளிக்கவேண்டும் எனக்கூறினார். ஆஸ்தான புலவர் வீடு திரும்பிய போது அவருடைய சிறியபாலகியான பேர்த்தி ஆஸ்தான புலவரின் கவலையான முகத்தைப் பார்த்து நான் ஏதும் தவறு செய்தேனா தாத்தா? என்று கேட்க அதற்கு அவர், நீ ஒன்றும் தவறு செய்யவில்லையம்மா, அரசன் என்னிடம் மூன்று கேள்விகள் கேட்டார், அதற்குப் பதில் அளிக்கவில்லையெனில் என்னை நாளை சிறையில் அடைத்துவிடுவார் எனக்கூற பேர்த்தி அந்தக் கேள்விகளைப்பற்றிக் கேட்டாள். ஆஸ்தானபுலவரும் அந்தக் கேள்விகளை பேர்த்தியிடம் கூறினார். கவலைப்படாதீர்கள் தாத்தா! நானே அரசவைக்கு வந்து அரசனிடம் இந்தக் கேள்விகளுக்குரியபதிலை அளிக்கிறேன் எனக் கூறினாள். மறுநாள் காலை ஆஸ்தான புலவருக்குப் பதிலாக பேர்த்தியே அரசசபைக்குச் செல்கிறாள். சபையில் உள்ள அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. பேர்த்தி அரசனிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்தி அந்த மூன்று கேள்விகளுக்கும் தான் பதிலளிப்பதாகக்கூற அரசன் நகைப்புடன் முதலாவது கேள்வியைக் கேட்டார். கடவுள் இருக்கும்இடத்தைக் குறிப்பிட்டு சொல்லு எனக் கேட்க, பேர்த்தி அரசனுக்கு அருகில் சென்று சிம்மாசனத்திற்கு அருகிலிருந்த பால் நிறைந்த குவளையை நோக்கி, இது என்ன வெனக் கேட்க, இது "பால்" என அரசன் கூறுகிறார். அதற்குப் பேர்த்தி இதிலிருந்து நாம் எவற்றையெல்லாம் பெறலாம் எனக்கேட்க தயிர், வெண்ணெய், மோர் போன்றவற்றைப் பெறலாம் என அரசன் கூற, அதற்குப் பேர்த்தி "அப்படியல்ல இந்தப்பாலில் குறிப்பாக தயிர் எங்கேயிருக்கின்றது? வெண்ணெய்எங்கேயிருக்கின்றது? எனக் கூறவேண்டும்" எனக்கூறினாள். அதற்கு அரசர் "அப்படி குறிப்பிட்டுக் கூறமுடியாது, அவை அனைத்துமே இந்தப் பாலில் நீக்கமறக் கலந்துள்ளன." எனக் கூறினார். அதற்குப் பேர்த்தி,"நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் கூறிய பதில் போன்றே கடவுள் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்துள்ளார். குறித்த இடமென்று ஒன்றுமில்லை" எனக் கூறினாள். அடுத்து இரண்டாவது கேள்வி, கடவுள் எந்தத் திசையை நோக்கிக் கொண்டிருக்கிறார்? எனக் கேட்க அதற்குப் பேர்த்தி அருகிலிருந்த விளக்கில் பிரகாசிக்கும் ஜோதி, எந்தத் திசையை நோக்கி ஒளிர்கின்றது? என்று கேட்டாள். அதற்கு அரசன் "குறித்த திசை என்று இல்லாமல் எல்லாத்திசையை நோக்கியும் தனது பிரகாசத்தைத் தருகிறது" எனக்கூற அதற்குப் பேர்த்தி, இந்த ஜோதி தரும் பிரகாசத்திற்கு குறித்தவொரு திசையில்லை! அதேபோன்றே கடவுளும் எல்லாத்திசையிலும் இருக்கின்றார் எப்போதும் அவர் உங்களையே பார்த்துக் கொண்டிருக்கின்றார். எனக்கூறினாள். அடுத்து மூன்றாவது கேள்வி கடவுள் என்ன செய்துகொண்டிருக்கிறார்? எனக் கேட்க பேர்த்தி அரசனிடம் நான் சிம்மாசனத்தில் உட்கார நீங்கள் கீழே நிற்க வேண்டும் எனக்கூற அரசனும் அதற்கு சம்மதித்து அவ்வாறே செய்தார். அதற்குப்பின் பேர்த்தி கூறினாள், யாரங்கே! இந்த மனிதரை சிறை பிடியுங்கள் என அரசனைப் பார்த்துக்கூற அனைவருக்கும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்பட்டது. அப்போது அந்த அரசனை நோக்கிப் பேர்த்தி கூறினாள், இதைத்தான் கடவுளும் செய்து கொண்டிருக்கிறார் அதாவது கண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிடத்திலேயே அரசனை சாதாரண மனிதனாக்கவும் சாதாரண மனிதனை அரசனாக்கவும் கடவுளால் முடியும் எனக்கூற அரசனுக்கு திருப்தியான பதில்களுடன் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ஆகவே,கடவுள் எந்த இடத்தில் இருக்கிறார்? கடவுள் எங்கிருந்தாலும் அவர் எம்முடனேயே இருக்கின்றார், கடவுள் எந்தத்திசையை நோக்கிக் கொண்டு இருக்கிறார்? நாம் எத் திசையிலி ருக்கின்றோமோ அத் திசையிலே இறைவன் எம்மை பார்த்த வண்ணம் இருக்கின்றார், கடவுள் என்ன செய்து கொண்டிருக்கிறார்? இறைவன் எப்போதும் எம்மைப் பாதுகாத்த வண்ணம் இருக்கின்றார். எமக்கு எவ்வளவு துன்பம், கஷ்டம் வந்தாலும் இறைவனின் நாமத்தைப் கூறுவதன் மூலமும் இறை பணியை செய்வதன் மூலமும் அவற்றை வெற்றி கரமாகக் கடந்து வர முடியும்.

ஸாயிராம்!

(பக்தர்கள் கேட்ட கேள்விகளுக்கு சகோதரி அபர்ணா முரளி அவர்கள் அளித்த பதில்களின் தொகுப்பு)

கேள்வி:-
நான் கோபப்படும் போதெல்லாம் சுவாமி என்னிடமிருந்து விலகுவது போன்றதொரு உணர்வு ஏற்படுகின்றது. நான் கஷ்டப் பட்டுக் கோபத்தைக் கட்டுப்படுத்தினாலும் கூட அது ஒருசில சமயங்களிலேயே சாத்தியமாகின்றது பல சமயங்களில் எனது கட்டுப்பாட்டை இழக்கின்றேன் இதிலிருந்து எவ்வாறு விடுபடலாம்?

அதாவது முதலாம் தரம் பயிலும் மாணவன் ஒரு பக்கத்தைப் படிக்க வேண்டு மெனின் அதற்கு அரைமணி நேரம் தேவைப்படலாம். ஆனால் அதே பக்கத்தை பத்தாம் தரம் பயிலும் மாணவன் படிக்கவேண்டுமெனின் ஐந்து நிமிடத்தில் படிக்க முடியும். நீங்கள் இப்போது இடைநிலையில் இருக்கின்றீர்கள் என நினைக்கின்றேன். நீங்களே கூறுகின்றீர்கள் பல சந்தர்ப்பங்களில் கோபம் ஏற்பட்டாலும் சில சந்தர்ப் பங்களில் அவை வெளிப்படுகின்றன ஏனைய சந்தர்ப் பங்களில் அவற்றைக் கட்டுப்படுத்த முடிகின்றது. சுவாமி இதைத் தான் கூறுகிறார் எங்களுக்குள் ஒரு சுய மாற்றம்(Self Transformation) நடைபெற வேண்டு மெனில் அதற்கு சிறிது காலம் தேவைப்படும் அதுவரையில் நாம் பொறுமையாக இருக்க வேண்டும். நம்பிக்கையுடன் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்!

கேள்வி:-
உலக ஆசைகளுக்காக பிரார்த்திப்பது தவறு ஆனால் ஆசைகளால் தான் துன்பம் பிறக்கின்றன. துன்பத்தின் போது பிரார்த்திப்பது இயல்பாக ஆசைகளைப் பெறுவதற்கு ஊக்குவிப்பது போன்று அமையாதா?

"கடவுள் வேறு உலகம் வேறு" என்று நினைப்பது மனித இயல்பு தான். சுவாமி கூறியிருக்கின்றார், உலகம் வேறு கடவுள் வேறு என்று ஒன்றுமில்லை. சேவை செய்யும் போது எமது வாழ்க்கை பற்றிய ஒரு சிந்தனையில் ஒரு மாற்றம் ஏற்படுகின்றது. நான் வசிக்கும் இடத்திலே கண் தெரியாதவர்களுக்கு சேவைசெய்யும் வாய்ப்பு கிடைத்தது. சேவை செய்யமுன் பயிற்சி வழங்கப்படும். முதலாவது பயிற்சி வகுப்பிற்கு சென்ற போது LIFT இலிருந்து வெளியே வரும் போது ஒரு கண் தெரியாத நபருக்கு என்னுடைய சிறந்த புன்னகையை அளித்தேன். அதற்கு அவர் GOOD MORNING என்று சொன்னார். அப்போதுதான் தோன்றியது, நான் புன்னகைத்ததை அவர் பார்த்திருக்கமுடியாது. ஆனால் நான் நின்றதால் ஏற்பட்ட அந்த ஒலியை வைத்துக் கொண்டு அவர் எனக்கு GOOD MORNING சொன்னார். அவர் GOOD MORNING சொன்னது எனது மனக் கதவைத் திறந்தது. இதுவே சேவையின் தாற்பாரியம். சேவை செய்யும் போது எமது மனக் கண்களும் திறக்கும். அதாவது மற்றவர்களின் நிலைகளையும் சேவை எமக்குப் புரியவைக்கும். ஆசைகள் மனித இயல்புதான். ஆனால் அது போராசையாக மாறக்கூடாது. ஆசைகளின் தேவையைப் புரிதல் வேண்டும். இம் மாற்றம் சேவை செய்வதால் பெறமுடியும். சேவை செய்வதால் மற்றவர்களின் நிலையைவிட எமது நிலை பரவாயில்லை. அல்லது அவர்களின் வாழ்க்கைத் தேவையைவிட எமது வாழ்க்கைத் தேவை ஓரளவு பூர்த்தியாகிய எண்ணம் தோன்றும் இதனால் ஆசைகளுக்கான வரம்பு வைக்கப்படும்.

கேள்வி:-
சில சமயங்களில் மன அழுத்தத்தையோ பதற்றத்தையோ எதிர்நோக்கும் போது எமது கடமைகளிலிருந்து விலகுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றதொரு உணர்வு ஏற்படும் அந்த உணர்வை எவ்வாறு சமாளிப்பது?

அது மனித இயல்புதானே! இது சில சமயங்களில் சத்தியசாயி நிலையத்திலேயே உருவாகும். இதற்கு உதாரணமாக மாணவன் ஒருவன் ஆசிரியரிடம், பாதாளமும் வைகுண்டமும் இருக்கா? எனக் கேட்க, அதற்கு ஆசிரியர் இரண்டு கிராமங்கள் உண்டு. அந்தக் கிராமவாசிகளுக்கு முழங்கைமூட்டு இல்லை. இதனால் கையினை மடிக்க அவர்களால் முடியாது. ஒரு கிராமத்தில் யாருமே சந்தோஷமாக இல்லை மெலிந்து இருந்தார்கள். இவர்கள் யாவரும் உணவருந்தும் போது தாமாகவே உணவு உட்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆனால் கையை மடிக்க இயலாததால் முடியவில்லை. மற்றய கிராமத்தில் எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தனர். ஏனெனில் அங்குள்ள மக்கள் ஒருவருக்கொருவர் உணவினை ஊட்டிவிடுகிறார்கள். எந்த சமயத்திலும் பிறருக்கு நன்மை செய்வதால் நாமும் நன்றாக இருக்கமுடியும். ஆனால் சில சமயங்களில் ஏன் நாம் செய்யவேண்டும்? என்ற கேள்வியும் எழுவதுண்டு. இதற்கு சுவாமியே உதாரணம். சுவாமியோ ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் இடையறாது ஓய்வின்றி பக்தர்களுக்கு சேவை செய்வதையே நோக்கமாகக் கொண்டார். அவர் ஓய்வெடுப்பதில்லை. மற்றவர்களுக்கு ஒரு எண்ணம் தோன்றலாம். சுவாமி கடவுள் தானே அவர் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று. ஆனால் கடவுள் மனித ரூபத்தில் தானே வந்தார். மனித ரூபத்திலே தான் சேவை செய்தார். மற்றவர்களுக்கு சேவை செய்வதால் மன அமைதி ஏற்படும். இவ்வாறான மன அழுத்தம் வரும் போது சேவையாவது செய்ய முயற்சிக்க வேண்டும். இன்னுமொரு மிகச்சிறந்த உதாரணம், தாய் தந்தை பிள்ளைக்கு புரியும் சேவை. நாம் அவர்களுக்கு எவ்வளவு தொந்தரவு கொடுத்தாலும் நான் ஏன் இவனுக்கு தாயாக இருக்க வேண்டும்? தந்தையாக இருக்க வேண்டும்? என்று அவர்கள் ஒருபோதும் சிந்தித்தது இல்லை. எனவே அவ்வாறான மன அழுத்த நிலை வரும்போது சேவை செய்ய முயற்சிக்க வேண்டும்.

கேள்வி:-
சுவாமியை இதுவரை நேரடியாகப்பார்க்காதது ஒரு ஏக்கமாகவே எப்போதும் இருந்துவருகிறது. இந்த ஏக்கத்தை எவ்வாறு போக்குவது?

நான் சுவாமியைப் பார்த்தது உண்டு. ஆனால் சிறுவயதில் எனது சகோதரர்கள் அதிகதடவை சுவாமியுடன் உரையாடியிருக்கின்றார்கள். அந்தஅளவு சுவாமிக்கும் எனக்கும் பௌதீகரீதியில் தொடர்பில்லை. சுவாமிக்கும் எனக்கும் இதயத்தோடு இதயரீதியான தொடர்பே இருந்தது. ஆனால் சுவாமி என்னுடன் பௌதீகரீதியில் தொடர்பு கொள்ளாமை பொருட்டுஎனக்கு சிறுவயதில் வருத்தமாக இருக்கும்.

அப்பொழுது எனக்குப்பிடித்த கதை ஒன்று ஞாபகம் வரும். ஒரு "ஏகலைவன்" என்ற இளைஞனுக்கு வில்வித்தை பயில வேண்டு மென்ற ஆசை. ஆனால் அவனது குலம் தாழ்குலம் என்பதால் அதற்கு பொருத்த மானதில்லை. துரோணாச்சாரியாரிடம் அவன் சென்று அம்பு பயில கற்றுத் தருமாறு கேட்டுக்கொள்ள, அவர் இளைஞனுடைய குலத்தை அறிந்து, "இது ராஜபரம்பரைக்குரிய பயிற்சி நிலையம். அதனால் உனக்கு கற்றுத்தர முடியாது" எனக்கூறினார். அவ் இளைஞன் நதிக்கரைக்குச் சென்று பிரார்த்தனை செய்த பின் களிமண்ணைப் பயன்படுத்தி துரோணாச்சாரியார் போன்றதொரு உருவம் செய்து மானசீகமாக அம்பு பயில ஆரம்பித்தான். அந்தச் சிலையை உண்மையான குருவாகக் கருதி அவன் பயிற்சியைச் செய்தான். நீண்ட காலத்திற்குப்பின் துரோணாச் சாரியாரும் பாண்டவர்களும் வேட்டையாடச் சென்றனர். இவர்களுடன் சென்ற நாயின் சத்தத்தைக் காணவில்லை. நாயினைத் தேடிச் சென்று பார்த்தால் அந்த நாயின் குறித்த இடத்தில் வாயைச் சூழ பல அம்புகள் எய்தப்பட்டிருந்தன. ஆனால் ஒரு துளி இரத்தம் கூட வரவில்லை. இதைப் பார்த்தவுடன் எல்லோருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டது. ஏனெனில் துரோணாச்சாரியார் இந்த வித்தையை யாருக்குமே கற்றுக் கொடுத்தது இல்லை. இதைப்பார்த்த துரோணாச்சாரியார், "இதைச் செய்தவர் என் முன்னே நிற்க வேண்டும்" எனக்கூற அந்த இளைஞன் அவர் முன் தோன்றினான். "யார் இந்த வித்தையினை கற்றுத் தந்தது?" என வினாவினார். அந்த இளைஞன் "நீங்கள் தான் கற்றுத் தந்தீர்கள்" எனக்கூறினான். அதற்கு துரோணாச் சாரியார் மறுப் புத் தெரிவித்தார். ஏகலைவன் துரோணாச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரியாரை ஆற்றங்கரையோரம் அழைத்துச் சென்று அவரின் சிலையைக் காட்ட அனைவருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டது. இந்தச்சிலை உனக்குக் கற்றுத்தந்ததா? எனக் கேட்க,"இது சிலையல்ல எனது குரு" என அந்த இளைஞன் கூறினான். நாம் எல்லோரும் சிலையைப்பார்த்து கல் எனும்போது அவ் இளைஞன் சிலையைப் பார்த்து குரு என்கிறான். அவனின் பக்தி எப்படியிருக்கும்? எனக்கு சுவாமியுடன் பௌதீக ரீதியில் அவ்வளவு தொடர்பு இல்லை எனும்போதும் அசையாத நம்பிக்கையும் பக்தியும் இருந்தால் போதும் என்று இக்கதை எனக்கு மேலும் உற்சாகமளிக்கும்.

இறைவன் எந்த ரூபத்திலும் வந்து எம்முடன் இருப்பார். கடவுள் எம்முடன் உரையாடுவதை அறிந்து கொள்வது எப்படியென்றால், எமது மனது எதுவித சிந்தனையுமின்றி அமைதியான ஆனந்தத்தில் திளைத் திருப்பதைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

கேள்வி:-

Emotional Attachment இலிருந்து நாம் எவ்வாறு விடுபடுவது?

கொடைக்கானல் செல்லும் போது சுவாமி சொன்னது என்னவென்றால் சுவாமி எப்பொழுதும் பக்தர்களுடனும் மாணவர்களுடனும் புகைப்படம் எடுப்பதுண்டு அப்போது சுவாமி சொன்னார் "பாருங்கள் ஒவ்வொருவரும் சுவாமியுடன் வந்து புகைப்படம் எடுத்து விட்டு போகின்றீர்கள் ஆனால் சுவாமி மட்டும் நிலையாக மாறாது இருக்கின்றேன். அதுபோன்று எமது வாழ்விலும் Emotional ஆக எமது குடும்பம் எம்முடன் இருக்கும். ஆனால் பௌதீக ரீதியில் உடனிருக்க மாட்டார்கள். எமக்கு கஷ்டம் வரும் போதெல்லாம் சுவாமி எம்முடன் நிலையாக இருப்பார். கடவுள் எப்பொழுதும் எம்மைப் பற்றியே சிந்திப்பா . உறவுகளிடையிலான தொடர்பும் அளவுக்கு மீறிசெல்லாது அது இயற்கையாகவே இருக்க வேண்டும்.

அதனால் உறவுகளிடையே ஏதேனும் விரிசல் ஏற்பட்டாலும்கூட அது எமது நன்மைக்காகவே நடக்கிறது என்ற புரிதல் இருக்க வேண்டும்.

ஜெய் ஸாயிராம்!

தொகுப்பு: செல்வி.ம.பிருந்தினி
யாழ்ப்பாணம்

துவிச்சக்கரவண்டியும் பொருளாதாரமும்

நாட்டின் பொருளாதாரத்திற்கு துவிச்சக்கரவண்டி ஓடுபவன் பெரும் நாசம் செய்கிறான். அவன் காரும் வாங்கமாட்டான். அதற்காகக் கடனும் படமாட்டான். கார் காப்புறுதியும் செய்யமாட்டான். பெற்றோலும் வாங்கமாட்டான். காரைச் சேவிசுக்கும் திருத்த வேலைகளுக்கும் விடமாட்டான். அதற்கு தரித்து நிற்கும் கட்டணமும் செலுத்த மாட்டான். அவன் எடையும் கூடமாட்டான். இதுமாத்திரமா? அவன் ஆரோக்கியமாக இருப்பதால் வைத்திய சாலைகள் மருந்துத் தொழிற்சாலைகள் நட்டத்தில் ஓடத்தொடங்கும். தேசத்தின் வருவாய்ச் சுட்டியிற்கு (GDP) ஒரு வகையிலும் உதவி செய்ய மாட்டான். மேலும் தி ர் உணவுச் சாலைகள், இருதயநோய் வைத்திய நிபுணர்கள் தேவையில்லாமற் போய் விடுவார்கள்.

எதுவேண்டும்? சிந்திக்கவும்.

சைக்கிளா? மக்டோனால்ட்டா?
நடைப்பயணம் செய்பவன் இவனை விட மோசக்காரன். இவர்கள் சைக்கிளே வாங்க மாட்டார்கள். ஆரோக்கியமாக இருப்பதால் நட்டமே ஏற்படும். ஆரோக்கியத்தைக் குறைப்பதற்கு ஒரு செலவும் ஏற்படாது.

சஞ்ஜே தக்கூர்
Euro Exim Bank Ltd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார் செய்தி

ஜோர்ஜ் பெபீடெலிஸ்
(22.12.2020) George Bebedelis Greece
சத்திய சாயி கல்வி இணைப்பாளர்,
ஆசிரிய தொழில்

பணிவுடனும் அன்புடனும் என்னை பகவானின் பாதார விந்தங்களில் அர்ப்பணித்து அவர் வழிகாட்டுதல், கருணை மற்றும் ஆசீர்வாதங்களை வேண்டிக்கொண்டு இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தால் கொண்டாடப்படும் கிறிஸ்மஸ் நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்தமைக்காக பகவானுக்கு நன்றி கூறிக்கொண்டு அனைவருக்கும் அன்பான சாயிராம்.

அன்புள்ள சகோதர சகோதரிகளே! ஆற்றல் மிக்க இளைஞர்களே! அழகான சுவாமியின் குழந்தைகளே! அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் நிகழ்வின் வாழ்த்துக்களும் புதுவருட வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

கிறிஸ்மஸ் பண்டிகையானது கிறிஸ்தவர்களால் மட்டுமல்ல மற்றும் பல்வேறுபட்ட மத நம்பிக்கைகளையுடைய மக்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. அது மகிழ்ச்சிக்கும் சந்தோசத்திற்குமுரிய காலமாகும். அது அலங்கார விளக்குகள், கீதங்கள், நாட்டியங்கள், அன்புப் பரிமாற்றங்கள் இரவு விருந்து, ஒன்றுகூடல்கள், மதுவிருந்துகளுடன் கூடியதாக உண்மையான பண்டிகையின் முக்கியத்துவம் மற்றும் பரிசுத்தம் மறக்கப்பட்டதாகவே காணப்படுகிறது.

ஆனால் சந்தர்ப்பவசமாக இம்முறை Covid-19 தொற்று காரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளால் ஒன்றுகூடல்கள், மதுவிருந்துகள், பாடலும் நாட்டியமும் ஆகியவை மட்டுப்படுத்தப்பட்டு மக்கள் வீடுகளினுள் நடமாட்டத்தினை மட்டுப்படுத்தி தமது குடும்பத்தினருடன் இந்நிகழ்வை கொண்டாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, இது ஒரு நல்ல நிகழ்வாக கருத்தாளம் மிக்கதாக அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டாடும் கிறிஸ்மஸ் நிகழ்வாக ஆன்மீக முக்கியத்துவ முள்ளதாக மாறியுள்ளது.

கிறிஸ்துமஸ்ம் அதனை சிறப்பாக ஆன்மீக முறையில் கொண்டாடுதலும். "இதனை எனது நோக்கமாகக் கொண்டு கிறிஸ்துவைப் பற்றியும் எமது சுவாமி அவரைப் பற்றிக் கூறியுள்ள வற்றைப் பற்றியும் சொல்ல விளைவதோடு கருத்தாளம் மிக்க கிறிஸ்துமஸ் பண்டிகை எப்படிக் கொண்டாடுவது என்பது பற்றிய எனது சில எண்ணங்களையும் முன்வைக்க விரும்புகிறேன்.

மின்னூடகத் தொடர்புமூலம் உலகிலுள்ள யாவரும் பெரு விழாக்களை நத்தார், மகளிர்தினம், உலகளாவிய தொடர் அகண்ட பஜனை, காயத்ரி மந்திர உச்சாடனம் ஒன்றாகச் சேர்ந்து கொண்டாட வாய்ப்பளித்துள்ளது. நான் கிரேக்க நாட்டிலிருந்துகொண்டே உங்களுடன் உரையாட முடிகிறது. நான் ஒரு கல்வியியலாளர். பிரசாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்திற்கு போகவேண்டுமென்று பெரும் ஆவல் கொண்டு முதன்முறையாக 1991ஆம் ஆண்டு சென்றேன். எனது பாடசாலை விடுமுறையைப் பயன்படுத்தி ஒவ்வொரு வருடமும் பிரசாந்தி நிலையத்திற்கு சென்றுள்ளேன். இது எனக்குக் கிடைத்த மகத்தான வரப்பிரசாதம். நத்தார் விழாவை இறைவனின் சந்நிதியில் கொண்டாடுவது பெரும்பாக்கியமாகும். சுவாமி நத்தார் தின விழாவின்போது ஒவ்வொரு வருடமும் அருளுரை நிகழ்த்துவார். இயேசுவின் போதனைகளை விளங்கப்படுத்துவார். அவரின் வாழ்க்கையைப் பற்றியும் சொல்வார்.

அன்பானவர்களே! கிறிஸ்துவின் பிறப்பானது எமது சுவாமியினுடையதைப் போலவே பிரவேசம் ஆகும். அன்றிப் பிரசவம் அல்ல. பிரபஞ்சத்தின் கர்த்தாவே இறங்கிவந்து கன்னிமேரியின் வயிற்றினுள் கருவாகினார். பெத்லகேமில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருந்த குழந்தை இயேசுவைப் பார்க்க மூன்று பிரபுக்கள் ஒரு நட்சத்திரத்தின் மூலம் வழிகாட்டப்பட்டனர். அக் குழந்தை எங்கும் தெய்வீக ஒளியை சிந்திக் கொண்டிருந்தது. அங்கு வந்த அம் மூன்று பேரில் முதலாமவர் கூறினார்,"இந்தக் குழந்தை இறைவனை விரும்பும்." இரண்டாமவர் கூறினார், "இவர் இறை வனால் விரும்பப்படுவார்." மூன்றாமவர் கூறினார்," இவர் எல்லோரையும் நேசிப்பார். இறைவனை விட வேறானவர் அல்ல."

தன்னுடைய ஆரம்பகால வாழ்க்கையில் இயேசு தனது இறைவனிடம் அன்போடிருந்தார். அந்நேரம் அவர் "நான் இறைவனின் தூதுவன்" என்றார். பின்னர் தனது அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள முற்பட்டபோது இறைவனின் தன்மீதான அன்பைப் புரிந்துகொண்டார். அதனால் "நான் கடவுளின் மைந்தன்" என்றார். பின்னர் இறைவன்மீதான தனது அன்பையும் தன்மீதான இறைவனின் அன்பையும் உணர்ந்து அந்த ஆனந்தத்தை அனுபவித்தார். அதனைப் போதிக்கவும் பரப்பவும் செய்யும்போது தன்னுள்ளேயே இறை சாம்ராச்சியம் இருப்பதை உணர்ந்தார். அதனால் "நானும் தனது தந்தையரும் ஒருவரே" எனப் பிரகடனப் படுத்தினார்.

இதுவே இறை அன்பின் உயரிய தன்மையைப் போதிக்க சிறந்ததாகக் கொள்ளப்படும். இதுவே அவரது முக்கியமான வேலையாகும். பல பிரச்சினைகளையும் துன்பங்களையும் எதிர்கொண்டபோதும் அவர் அவற்றை சமத்துவத் தன்மையுடன் எதிர்கொண்டார். எல்லா சோதனைகள் அவமதிப்புக்கள் குற்றம் கூறுதல்களால் ஏற்படும் வெறுப்பை அன்பால் எதிர்கொண்டார். அதற்காகத் தனது வாழ்வையே தியாகம் செய்தார். அவரது அளவுகடந்த அன்பே இதற்கான காரணமாகும். அதனாலேயே உலகம் முழுவதும் அவர் அறியப்பட்டவரானார்.

இயேசு அன்பு மற்றும் இரக்க குணத்திற்கான வாழ்வியல் உதாரணங்களை ஸ்தாபித்து இலகுவான நடைமுறைச் சாத்தியமுள்ள போதனைகளை அளித்தார். இந்த தெய்வீக குணநலன்களை எம்முள் வளர்த்துக்கொள்வது எப்படி என்பதை அவர் காட்டினார். அவர் உண்மை, தர்மம், சமாதானம், அன்பு, அகிம்சை மற்றும் தன்னலமற்ற அன்பை போதித்தார். அவர் வறுமைப்பட்டவர்களுக்காக சேவை புரிந்தார். தேவையுள்ளோர், பசியுடனிருப்போர், நோயாளர் ஆகியோருக்கு சேவை செய்வது இறைவனுக்கு செய்யும் சேவையேயாகும் என தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு அவர் போதித்தார். இது "மனிதகுலத்துக்கு செய்யும் சேவையே இறைவனுக்கு செய்யும் சேவை" என பகவான் எமக்கு போதித்ததை ஒத்ததாகும்.

இயேசுவின் தெய்வீகத்தைக் கேள்விப்பட்டு பல நாடுகளிலிருந்து மக்கள் கலீலியோவின் கரையில் திரண்டார்கள். இயேசுபிரான் பல அற்புதங்களை நிகழ்த்தினார். பின்பு அருகிலுள்ள மலைச் சரிவில் ஏறிப் (மலைப் பிரசங்கம்) பின்வருமாறு போதித்தார். அவர் 8 விதமான ஆசீர்வாதங்களைச் சொன்னார். (மத்தேயு - 5)
என் பொருட்டு மக்கள் உங்களை இகழும்பொழுதும், துன்புறுத்தும் பொழுதும் பலவிதமான பொய்கள் சொல்லித் தீமைகள் விளைவிக்கும் பொழுதும் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6ஆவது ஆசீர்வாதமே என்னைக் கவர்ந்தது. சுவாமியும் இதைத்தான் திரிகரண சுத்தி (அதாவது எண்ணம் சொல், செயலில் தூய்மை) என்று வலியுறுத்தியுள்ளார். அவர் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி (EHV) என்றால் 3H என்று (தலை, இதயம், கை Head, Heart, Hand) தூய்மையும் ஒருமையும் இருப்பதையே விளக்கியுள்ளார். இதைப் பலர் பயிற்சி செய்வதில்லை. சுவாமியின் செயற்பாடுகள் அனைத்தையும் அவதானித்தால் இத் தூய்மையை விளங்கலாம்.

சுவாமி வழக்கமாக எல்லாவற்றையும் அவதானிப்பார். அவருக்கு மிகவும் விருப்பமான மாணவர்கள் பாடும் பாட்டைக் கேட்கவும்.

ஹம்கோ தும்சே பியார் கிட்டுனா (2)
சாயி தும ஹீ யானதே
டிலோன்ஹி தட்கன் தும்ஹோ சாயி
தும் ஹமாரே பிராண ஹோ

(தமிழ்)
உங்கள்மீது நாம் எவ்வளவு அன்பு
உங்கள் ஒருவருக்குத்தான் இது தெரியும்
சுவாமி நீங்களே எமது இதயத் துடிப்பு
நீங்களே எமது பிராணன்
ஹம்கோ தும்சே பியார் ஹே (2)

We Love you Dearest Lord
We Love you (2)

நீவு லேனி மா ஜீவனம்
நீரு லேனி சேப்ப வேதனம்
நீ சந்நிதே மாக்கு பென்னிதே
நீடு சூப்பே பிராண சமானம்
நீக்கு மாக்கு ஒகே பந்தமு
அதியே பிரேம பந்தமு

(தமிழ்)
நீரில்லாமல் எமது வாழ்வு
தண்ணீரிலிருந்து வெளியே உள்ள மீனைப்போல
உங்களின் அருகாமையே எமது பெரும் செல்வம்
உமது கடைக்கண் பார்வை
எங்களின் பிராணனுக்கு சமன்
உமக்கும் எமக்கும் இடையே ஒரேயொரு
இணைப்புத்தான்
அதுவே பிரேம பந்தம்!
பிரேம பந்தமே இறுதி அடைவு என்று முடிக்கப்பட்டது.
இப் பாடல்களின் கருத்தைத் தெரிவதற்கு ஹிந்தியும் தெலுங்கும் படித்தேன்.

இயேசுவைப் பற்றிக் கூறும்போது பகவான் கூறுகிறார். அவர் துறந்த முக்கியமான விடயம் அகம்பாவம் ஆகும். அதுவே இறைவனைச் சரணடைவதற்கு எமக்கு மிகப் பெரும் தடையாகவுள்ளது. மேலும் தனது சொந்த இலாபங்கள், செல்வாக்கு, தனது நிலை ஆகியவற்றை மனித குலத்தின்பொருட்டு இயேசு துறந்தார்.

பகவான் பாபாவினால் அறிவிக்கப் பட்டபடி உயரிய மனிதர்கள் மனித குலம் முழுமைக்குமே சொந்தமானவர்கள். அத்துடன் ஒவ்வொரு மனிதனுள்ளும் உள்ளிருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்த அவர்களை விழிப்புணர்வு செய்யவே இயேசு மனித உருவம் எடுத்தார். "தேவனின் இராச்சியம் ஒவ்வொருவருள்ளுமே உள்ளது" என இயேசு போதித்தார். தெய்வீகம் படைப்பில் உள்ளுறைந்தே உள்ளது.

"நான் கடவுள்; நீயும் கடவுள். நான் உனது இதயத்தில் உள்ளேன். அதேபோல் பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ளேன்" என்று பாபா கூறுகிறார். தனது போதனைகளின் நம்பகத்தன்மையை ஊக்குவிக்கவே தனது தெய்வீக சக்திகளை அவர் பாவித்தார். மனித குலத்துக்கு உயரிய ஆனந்தத்தை அளிக்கும் பாதையை அவர் வகுத்துக்காட்டினார். கருணை, இரக்கம், நம்பிக்கை, அன்பு மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றை தம்முள்ளே ஏற்றுக்கொண்டு வளர்க்க அறிவுறுத்தினார். அவர் சவால்களை மறுதலிக்கவோ அனுசரித்துப் போகவோ இல்லை. அவர் உடல் தொடர்பான ஆசைகளை கைவிட ஆயத்தமாக இருந்தார். இதுவே மிகஉயரிய தியாகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவுடைய எண்ணங்களும் இந்தியாவின் இலக்கியங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களும் சமானமானவையே. இயேசுவினுடைய கொள்கைகள் இலட்சிய வேத படிப்பினைகளுடன் ஒத்துப் போகின்றன. இதுவே உண்மையின் தன்மையாகும். அதனால் இயேசு அவதரித்தது புதியதொரு வடிவில் சனாதன தர்மத்தை உலகிற்கு வெளிப்படுத்தவே ஆகும்.

இயேசுவிடம் அவரின் கட்டளைகளுள் எது முக்கியம் என்று கேட்டார்கள். இதற்கு அவர் இரண்டைச் சொன்னார். (மத்தேயு 22)

முதலாவது :
இறைவன் மீது இதயபூர்வமாக, முழுமனதுடன் முழு ஆன்மாவுடன் அன்பாயிரு.
இரண்டாவது :
அயலவனையும் உன்னைப் போல் நேசி
சுவாமி சொன்னார்., இதயத்தில் ஒருவரே இருக்கமுடியும். அது சோ(f)பா அல்ல. இசைக் கதிரையும் அல்ல என்றார். ஒருவருக்கே இடம்.

சுவாமி இதை எப்படிப் பின்பற்ற வேண்டுமென்று Joy என்ற சொல்லை வைத்து விளங்கப்படுத்தினார்.
J- Jesus முதலிடம் இறைவனுக்கே
O- Others - இரண்டாவது இடம் மற்றவர்களுக்கே
Y- You - மூன்றாவது, கடைசியாகத்தான் உன்னைக் கவனிக்க வேண்டும்.
இதைப் பின்பற்றினால் ஆனந்தத்தை அனுபவிக்கலாம்.

இரண்டாவது கட்டளையில் கூறிய அயலவன் யாரென்று கேட்டபோது, இயேசு ஒரு கதை சொன்னார். (நல்ல சமாரியன் - பக்கம் 17 இல் உள்ளது) இதைத்தான் சுவாமியும் "அனைவரையும் நேசி : அனைவருக்கும் சேவை செய்" என்று வலியுறுத்தியுள்ளார். அயலவனை நேசிப்பது கடவுளை நேசிப்பதற்குச் சமன்.

கடவுள்மீது அளவிலா அன்பு பூண்டால் அது பக்தியாகும். பக்தி எமக்கு சக்தியை அளிக்கும். சக்தி விரக்தியை ஏற்படுத்தும். விரக்தி முக்தியைத் தரும். இதுவே இறைவனுடன் இணையும்வழி.

ஆசைகளைக் கட்டுப்படுத்தினால் தூய்மை ஏற்படும். தரிசனத்தின் போது சுவாமியின் வருகை அழகாக இருக்கும். அவர் கடிதங்கள் எடுப்பார். இக் கடிதங்களில் அநேகர் தங்களது துன்பங்களையும் ஆசைகளைப் பற்றியுமே எழுதி இருப்பார்கள். சுவாமி அடிக்கடி கையை உயர்த்தி ஆசீர்வதித்து பொறுமையாக இரு என்று சொல்வார். Wait, Wait என்றும் சொல்வார். சுவாமியின் Wait, Weight ஐக் குறிக்கும். எடை குறைவது எமது ஆசை மூட்டையே குறைவதைக் குறிக்கிறது. ஆசைமூட்டை குறைந்தால் பயணம் இலேசாக இருக்கும் என்று சுவாமி அடிக்கடி சொல்வார்.

இயேசு,"இறைவனின் இராட்சியத்தைக் கேள். மிகுதி எல்லாம் உனக்குத் தரப்படும்." என்று சொன்னார். நாம் எமது அஞ்ஞானத்தை அகற்ற வேண்டும்.
சுவாமி பலமுறை என்னை நேர்காணலுக்கு அழைத்து பல விளக்கங்கள் தந்துள்ளார்.

சுவாமி சைவ உணவையே அங்கீகரித்துள்ளார். இதற்கு ஜீவகாருண்யமே அடிப்படை. வேதத்திலும் புருஷசுக்தத்திலும் சகல ஜீவராசிகளின் தன்மையைப் பேணவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஒருமுறை ஜூலைமாதம், ஞாயிற்றுக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி தரிசனம் முடித்துப் பின் நேர்காணல்களையும் முடித்து தரிசனம் கொடுக்க வந்தார். காலையில் இருந்தவர்கள் அநேகர் போய்விட்டபடியால் நான் முன்னுக்குப் போய் இருந்தேன். சுவாமி என்னை உற்றுநோக்கி வரும்படி சைகை காட்டினார். நான் அவர் முன்னிலையில் முழங்காலில் நின்றேன். சுவாமி பல கேள்விகளைக் கேட்டார். கொஞ்சநேரம் எனக்குப் பதில் சொல்ல மூளை வேலை செய்யவில்லை. எனது மதம் யாது எனக் கேட்க, கிறிஸ்தவம் என்று சொன்னேன். சிலுவையின் அர்த்தம் என்ன என்று கேட்டார். நேர்கோடு அகங்காரத்தைக் குறிக்கிறது. குறுக்குக்கோடு அதை அழிப்பதைக் குறிக்கிறது எனச் சொன்னேன். சுவாமி சிரிப்புடன் அருகிலிருந்த மாணவர்களுக்குச் சரியான மறுமொழி என்று சொன்னார் நான் சுவாமியிடம் நீங்களும் இயேசுவும் ஒன்றுதானே என்றேன். அதற்குச் சுவாமி தன் உருவம், உடை எல்லாம் இயேசுவின் உருவம் உடைக்கு வேறுபட்டதே? எவ்வாறு ஒன்று என்கிறாய்? என்றார். சுவாமி தேகம், உருவம் வேறாயினும் ஆத்மா ஒன்றுதானே என்றேன். சுவாமி சிரித்துக்கொண்டே சரியான மறுமொழி என்று சொன்னார்.

ஒன்றே ஒன்று

வானம் ஒன்றே,பூமிஒன்றே,
வாழ்வின் உயிரும் ஒன்றே!
கானம் செய்யும் இசையும் ஒன்றே
கருதும் அன்பும் ஒன்றே!
ஈனம் உணர்வாய் வேற்றுமைகொள்ளும்
இன்பம் வேண்டாம் - இனிமேல்
தானம் அதிலேபல்வகைஎனினும்
தருமே இன்பம் ஒன்றே

கடலின் மேலேஅலைகள் போலே
கடக்கும் எண்ணம் கோடிகோடி
கடவுள் பூரணர்,கர்த்தர்,குரஆன்
கருதும் மதங்கள் நாடிநாடி
கலக்கும் நதிகள் ஒன்றாய் கடலில்
களிக்கும் அன்பாய் ஓடிஓடி
இலக்குஅதுவே இதயம்தனிலே
இணையும் குருதி ஒன்றே ஒன்றே!

நாடும் இசையும் அன்பின் செயலும்
நாடு கடந்து ஒலிக்கும் ஒலிக்கும்
நாடும் மொழியும் சாதி சமயம்
நமனுக்கில்லை பலிக்கும் பலிக்கும்
தேடும் தெய்வம் சேர்ந்தால் என்றும்
தெளிவில் உள்ளம் களிக்கும் களிக்கும்
ஆடும் அலைகள் கடலின் ஆழம்
அமைதி அதிலே குளிக்கும் குளிக்கும்.

திரு. சி.சிவபாலன்
யாழ் மத்தி.

எல்லாம் ஆத்மா என்றால் நீங்களும் தெய்வங்களே. எல்லோரிலும் நாணுள்ளேன். நாம் இதை அனுபவிக்கவேண்டும். சாதனைகள் மூலமும் அன்பு மூலமும் கடவுளைக் காணலாம். வேதம் சொல்கிறது, பிரம்மனை அறிந்தவன் பிரம்மமாகின்றான்.

மேலும் நீ ஒளியில் உள்ளாய். பின்பு ஒளி உன்னுள் ஆனது. பின்பு நீயே ஒளியானாய். இந்த அத்வைத தரிசனமே ஞானம். இருப்பது ஒன்றேயாகும். பன்மையில் ஒருமை காணவேண்டும். வெளித் தோற்றத்திலிருந்து அகலவேண்டும்.

பிரசாந்தி நிலையத்தில் பலர் வருவார்கள். பல விழாக்கள் கொண்டாடப்படும். மதங்களின் ஒற்றுமையே சுவாமியின் போதனையாகும்.

இயேசுவும் கடவுள் ஒன்றே. அதைப் பல பெயரில் அழைக்கிறார்கள். எல்லா நாமங்களும் உருவங்களும் நானே என்று சொன்னார். ஆத்மாவின் அடிப்படையில் சொல்லப்பட்டது.

இறவா எங்களை ஆசீர்வதித்து எங்களுக்கு பரவச ஆனந்தத்தை அளிப்பீராக என்று இந்த நத்தார் பண்டிகையில் பிரார்த்திக்கிறேன்.

மகிழ்ச்சியான நத்தார்.!!!

ஜெய் சாயிராம்

தொகுப்பு:
டாக்டர் ஜெ. தனேஸ்குமார்.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை அடையும் பக்தி மார்க்கத்தில் பகவான் கூறிய

9 படிகளாவன:



1. பகவானின் புகழையும் பெருமையையும் தெய்வீகத்தின் அளவிடற்கரிய வெளிப் பாடுகளையும் திரும்பத்திரும்ப கேட்பதன் மூலம் எம்மை உன்னதமாக்கலாம்.
2. இறைவனின் பல செயற்பாடுகளை எப்போதும் பாடிக்கொள்ளல்
3. இறைவனின் அழகு, மேன்மை, கருணை ஆகியவற்றை மனதால் ஆழமாகச் சிந்தித்தல்
4. இறைவனின் அடிச்சுவடுகளை மன ஒருமைப் பாட்டுடன் மனதில் பதித்து வணங்குதல்
5. அடுத்ததாக நாளாந்த கிரியைகளுடன் வழிபாடு நடைபெறும். இதனால் மனதில் திருப்தியும் சாந்தியும் ஏற்படும்.
6. அடுத்ததாக தனது இஷ்ட தெய்வத்தின் உருவத்தை எல்லாவற்றிலும் எல்லோரிலும் காண்பான். இதனால் சகல உயிர்களையும் இயற்கையையும் வணங்கும் பக்குவமடைதல்.
7. பக்தன் இறைவனின் சேவகனாகவே இருத்தல். எப்போதும் சேவையிலீடுபடுதல்.
8. இறைவனுடன் நட்பு மனப்பாங்கு கொள்ளல். இறைவனின் கிருபையையும் சக்தியையும் அனுபவித்தல்.
9. இறுதி நிலை ஆத்ம நிவேதனமாகும். முழுமையாக சரணடைந்த நிலை.

அருளுரை : 19.02.1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு செய்தவனையும் நேசி

பனிக்காலத்தில் பரிசுத்த பிரான்சிஸும் (Saint Francis) சகோதரர் லியோவும் கிராமத்திலே வெகு தூரம் பயணிக்கிறார்கள். நெடுநேரமாக மௌனமாகச் சென்று கொண்டிருந்தார்கள். சகோதரர் லியோ, பிரான்சிஸிடம் எப்படி நாம் பரிபூரண ஆனந்தத்தை அடையலாம்? என்று கேட்டார். அதற்கு பிரான்சிஸ் அவர்கள், எமது சகோதரர்கள் எல்லோரும் தூய்மையடைந்து அற்புதங்கள் பல செய்தாலும் பரிபூரண ஆனந்தத்தை அடையமாட்டோம்" என்று கூறி, நடந்துகொண்டே சென்றார். சகோதரர் லியோ ஓடிப்போய், மறுபடியும் பரிபூரண ஆனந்தம் என்றால் என்ன?" என்று கேட்டார்.

பிரான்சிஸ் நின்று "பறவைகளுடனும் மிருகங்களுடனும் கதைக்கத்தெரிந்தாலும் இயற்கையின் இரகசியமனைத்தையும் அறிந்தாலும் உலகிலுள்ளவரின் நோயைக் குணமாக்கினாலும் பரிபூரண ஆனந்தத்தை அனுபவிக்கமுடியாது." என்று கூறி நடந்து சென்றார். லியோ அவர்கள் விரைவாக நடந்துபோய்,"அருட்தந்தை பிரான்சிஸ் அவர்களே பரிபூரண ஆனந்தத்தின் இரகசியம் என்ன?" என்று உரத்த குரலில் கேட்டார்.

அருட்தந்தை,"நாம் இந்த இருளில், குளிரில் முன்னாலிருக்கும் மடத்திற்குப்போய் உள்ளே செல்ல அனுமதி கேட்டபோது, காவற்காரன் எங்களைத் திட்டி வெளியே போகும்படி தள்ளினாலும் அப்போது அவனின் நலத்திற்காக இதயபூர்வமாக இயேசுவின் ஆசீர்வாதத்திற்காகப் பிரார்த்தித்தால், நாம் பரிபூரண ஆனந்தத்தை அனுபவிப்போம்." என்று கூறினார்.

- பரிசுத்த பிரான்சிஸ்
- அசிசி (St. Francis Assisi)

தேசிய சேவைத் திட்டம்



புற்றுநோயாளர் காப்பகம்
ஹன்வல, மகரகம

வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புற்று நோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது. இதில் வழங்கப் படும் சேவைகள் அனைத்தும் இலவசம். இச் சேவைத்திட்டத்தில் நீங்களும் பங்கு கொள்வதுடன் சாயி சேவையில் உங்களையும் கருவியாக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
தெலைபேசி: 0094 715 678 332
E mail - info@ssiosrilanka.org
Web: www.ssiosrilanka.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு சோதனைகளை எதிர்கொள்ளலாம்?

எத்தனை சோதனைகளை கடவுள் தருகிறாரோ நீ அந்தளவுக்கு உன்னதமாவாய்.

சோதனைகள் வருகிறதென்றால் நீங்கள் பயம்கொள்வீர்கள். முன்பிருந்த பக்தர்கள் சோதனைகளை எதிர் கொள்ளத் தயாராகி இருந்தார்கள். அவர்கள், எங்களுக்கு சோதனைகள் வேண்டு மென்று கேட்பார்கள்.

சோதனைகள் (Test) தெய்வத்தின் ருசி (Taste) ஆகும். (Test is Taste of God.) நான் தெய்வீகத்தின் விருப்பத் திற்கு எதிராக செயற்படமுடியாது. அந்த தெய்வீக சோதனைகளே என்னைத் திருப்திப் படுத்தும்.

நீங்கள் சோதனைகளை விரைவாகத் தரும்படி கேட்கவேண்டும். ஒருபோதும் சோதனைகளைத் தள்ளிப் போடும்படி கேட்க வேண்டாம்.

எவ்வளவு விரைவாக நேரம் தாழ்த்தாமல் சோதனைகளை ஏற்கின்றீர்களோ, அவ்வளவு விரைவாக உயர்நிலை அடைவீர்கள். உயர்நிலை அடைவதற்கு சோதனைகளை எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

நீங்கள் கட்டாயமாக சோதிக்கப்படுவீர்கள். அடுத்த உயர்நிலைக்குப் போவதற்கு இவற்றை எதிர் கொள்ளத்தான் வேண்டும். சோதனைகள் வரும்போது ஆனந்தம் கொள்ளவேண்டும். வீணாகப் பதற்றமடையக் கூடாது. சோதனைகள் நெருங்கும்போது கூடக்கூட ஆனந்தமாய் இருங்கள். சோதனைகளை எதிர்கொண்டுதான் தேர்ச்சியடைந்து உயர்தர வகுப்பிற்குப் போவோம்.

முற்காலத்தில் ஆச்சாரியார்கள் சீடர்களை சோதிக்கும்போது அவர்கள் அவற்றை வரவேற்றார்கள்.

ஏகல்வியா ஆச்சாரியார் பெருவிரலைத் தட்சணையாகக் கேட்டபோது மகிழ்ச்சியுடன் வெட்டிக் கொடுத்தார். இதனால் ஏகல்வியன் எல்லோராலும் போற்றப்பட்டார். எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும். ஏனென்றால் தெய்வத்திடம் தன்னலமான ஆசைகளே இல்லை. அவர் பக்தரின் ஆசைகளையே நிறைவேற்ற விருப்பம் கொண்டவர். இதை தெளிவாக அறியாமல் தெய்வத்தை நிந்திப்பதால் உங்களின் வாழ்க்கையையே சீரழிப்பீர்கள்.

பிரேம சொரூபகளே! பிரேமையே உங்களை உயர்நிலைக்கு கொண்டுசெல்லும். ஆச்சாரியார் எப்போதும் தெய்வீகமானவர். அவர் தன்னலமற்று ஆனந்தத்துள் நிலைத்திருப்பவர். தெய்வம் தன்னலமற்றது. நீங்கள் ஏன் தன்னலமாய் இருக்கவேண்டும். தெய்வத்தில் தன்னலமோ குறையோ நீ கண்டால் அது உன்னுடைய எண்ணத்தின் பிரதிபலிப்பேயாகும்.

பிரதிபலிப்பு, பிரதிச் செயல், பிரதி ஒலி எண்ணங்களை மாசடையச் செய்கின்றன.

தெய்வத்திடம் வெறுப்போ பொறாமையோ போன்ற கீழான குணாதிசயங்கள் இல்லை. உனது கீழ்த்தரமான எண்ணங்களே தெய்வம்மீது வெறுப்பை உண்டாக்குகின்றன.

ஆகவே பகவான், நாம் மகிமையான எண்ணங்களையும் மகிமையான உணர்வுகளையும் மகிமையான உணர்ச்சிகளையும் விருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுள்ளார். இவற்றையே இக்கணமிருந்து நாம் பயிற்சி செய்யவேண்டும்.

ஆகவே சோதனைகளை வரவேற்று எதிர்கொண்டு மேன்மைநிலையை அடையுங்கள். சோதனைகள் இல்லாமல் உயர்நிலைக்கு உயர்த்தமுடியாது. இச் சோதனைகள் தெய்வீகமானவை என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். இவை Test இல்லை, உண்மையாக தெய்வத்தின் விருப்பமேயாகும் (Teaste). வாழ்க்கையில் வரும்தடைகள் பிரச்சினைகள், கவலைகள், பதற்றம், நெருக்கடிகள் எல்லாம் உங்களின் நன்மைக்காகவே என்று நம்பிக்கை கொள்ளவேண்டும்.

சுவாமியின் அருளுரை-தொகுப்பு சதீஷ் நாயக் (Sathsh Naik)
20.04.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தன் இவ்வாறு பிரார்த்திக்க வேண்டும்.

ஓ கடவுளே!
நீ உணர்ந்து வளரும் மரமானால்
நான் கொடியைப் போல
உன்னைப் பற்றிக் கொள்வேன்.

நீ மலர்கின்ற பூவானால்
நான் தேனியாக
உன்னைச் சுற்றி வருவேன்

நீ மேரு பர்வதமானால் (மலை)
நான் அருவியாக வீழ்வேன்

நீ வரம்பற்ற வானமானால்
நான் உன்னில் நட்சத்திரமாவேன்

நீ ஆழங்காண முடியாத சமுத்திரமானால்
நான் உன்னில் நதியாக வந்து கலப்பேன்.

அருளுரை: 26.04.1996

கூற்றுக்கள்

வெற்றி மகிழ்ச்சியைத் தரும்
தோல்வி அனுபவத்தைத் தரும்

துன்பக் கண்ணீர் பயிரை வளர்க்கும் நீராகிறது.

பக்தியின் பொருட்டு கற்பிக்கப்பட்ட துவைதம் அத்வைதத்தை விட அழகு வாய்ந்தது.

பக்தியால் பாவியும் பரமனாகலாம்.

காமம், கோபம், அபிமானம் முதலியவையுங்கூட பகவானிடம் செலுத்தப்பட்டால் பகவானை நினைக்கக் காரணமாவதால் சம்சாரத்திலிருந்து விடுபட வழியாகும்.

கரித்துண்டு நெருப்பில் விழுந்தால் நெருப்பாகிவிடுவது போல் பகவத் சம்பந்தம் கரிக்கட்டையை போன்றவர்களையும் தன்மயமாக்கிவிடுகிறது.

இறைவன் நாமரூபத்திற்கப்பால் சத் - சித் - ஆனந்தமானவன்.

காலம் இடம் அறிந்து பேச வேண்டும்.

எவ்வாறு பிறக்கிறோம் என்பது முக்கியமல்ல எவ்வாறு இறக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

வாசகரின் கடிதம்.....

அன்புடைய சாயி அன்பர்கள் அனைவருக்கும்....

சாயி மார்க்கம் மே - ஆகஸ்ட் 2020 இதழ் கிடைத்தது. உலக வாழ்க்கையாகிய அடர்ந்த திக்குத்திசை தெரியாத காட்டில் பாதையைத் தவறவிட்டுச் செல்லும் வழி தெரியாது வாழ்க்கையின் குறிக்கோள், அதன் நோக்கம் என்பவை தெரியாது தத்தளித்துத் தவித்த எனக்கு அன்மீகம் என்ற பரந்த சமுத்திரத்தின் கலங்கரை விளக்கமான சுவாமியின் உபதேசங்கள் மூலமாக உண்மையை உணர்த்தி உன்னதமாக செல்லும் திசை மார்க்கத்தைப் போதித்துள்ளீர்கள் பிரேமை வடிவானனான கடவுளை அடையப் பிரேமையே அன்பே மிகச் சிறந்தவழி என்ற உண்மையை அறிவித்து ஒப்பற்ற உதவி செய்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் இதயபூர்வமான எனது நன்றிகள் மிக்க மகிழ்ச்சி. சந்தோசம் பிரபஞ்சங்கள் எல்லாம் உயிரினங்கள் எல்லாம் முழுப்படைப்புமே பேரானந்தமுடன் இருக்க நினைப்பதல்லால் வேறொன்று அறியேன் பராபரமே

இப்படிக்கு அன்பன்
மு.நாவலன்
கொட்டாஞ்சேனை
29.1.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

United Nations Nations Unies

NON-GOVERNMENTAL ORGANIZATIONS BRANCH
OFFICE OF INTERGOVERNMENTAL SUPPORT AND COORDINATION FOR SUSTAINABLE DEVELOPMENT
25th Floor Secretariat Building, United Nations, New York, N.Y. 10017
Telephone: (212) 963-8652; Fax: (212) 963-9248
Website: www.un.org/ecosoc/ngo Contact: www.un.org/ecosoc/ngo/contact

17 August 2020

Dear NGO Representative,

Subject: Follow-up to the decision of the Economic and Social Council

I am pleased to inform you that on 24 June 2020, the Economic and Social Council (ECOSOC) adopted the recommendation of the Committee on Non-Governmental Organizations (NGOs) to grant special consultative status to your organization, **Sri Sathya Sai Central Trust**. Please accept our heartfelt congratulations.



Aum Sri Sai Ram.

Greetings on this most auspicious occasion of the Vijayadashami, with a deep sense of gratitude and joy, we share with all of you an announcement of immense significance. The United Nations (ECOSOC) has accorded an august global recognition to the Sri Sathya Sai Central Trust, for its unparalleled humanitarian work, by granting it a Special Consultative Status.

On June 24, 2020, the United Nations Economic and Social Council (ECOSOC) adopted the recommendation of the Committee on NGOs to grant the special status to the Trust. ECOSOC is one of the six principal organs of the United Nations that serves as the central forum for discussing international economic and social issues and formulating policy recommendations addressed to member states and the United Nations system.

The Special Consultative Status conferred on the Sri Sathya Sai Central Trust enables it to actively engage with ECOSOC and its subsidiary bodies, as well as with the United Nations Secretariat, programmes and agencies in several ways. The trust can also make representations to the United Nations in fields where the Trust has contributed over the past many decades and continues to be active in. For us, this is a Prestigious opportunity given by Bhagawan, to take HIS universal message of Love & Service to millions around the world.

Sri. R. J. Rathnakar,
Managing Trustee, Sri Sathya Sai Central Trust elaborates in the following video message.

https://youtu.be/7vGVNEDEfSg

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருட வாழ்த்துக்களும் செய்திகளும்

அன்புள்ள சகோதர சகோதரிகளே

உங்கள் அனைவருக்கும் அன்பு நிறைந்த சாந்தியான பரவச ஆனந்தமான 2021ம் வருட வாழ்த்துக்கள்

கலியுக அவதார் பகவான் சத்யசாயி பாபாவின் காலத்தில் வாழக் கிடைத்தது எமது பாக்கியமாகும். அவர் மனிதப் பிறப்பின் நோக்கை எமக்குக் கூறி வாழ்ந்து காட்டியுமுள்ளார். அவர் நாம் அன்பின் திருவுருவமே என்றும் நாம் எப்படி அன்பில் வாழ வேண்டுமென்றும் கற்பித்துள்ளார்.

சுவாமியே எங்களுக்கு அடைக் கலமும் ஆதாரமுமாவார்.

கடந்த 2020ம் ஆண்டில் ஏற்பட்ட சிரமத்திலிருந்து காப்பாற்றியதற்காக நன்றி கூறவேண்டும். நடந்ததெல்லாம் எமது நன்மைக்காகவே என்பதில் நம்பிக்கை கொள்ள வேண்டும். சுவாமியினடியில் நம்பிக்கை வைத்தால் எதையும் ஏற்றுக் கொள்வதுடன் அச்சமின்றி வாழலாம். ஆன்மீகம் என்றால் கஷ்டங்கள் வராமலிருப்பதல்ல, கஷ்டங்கள் மத்தியில் ஆண்டவனின் கிருபையால் சாந்தியுடன் வாழ்வதேயாகும்.

உலகளாவிய வைரஸ் தொற்றின் போதும் நாம் சாதனையைச் செய்தோம்.

தனிமைப்படுத்தல் காலத்தில் நாம் உள்நோக்கிப் பயணித்தோம்.

எமது நிறுவனம் பல இடங்களில் தேவையுள்ளவர்களுக்குச் சேவை செய்தது. வைத்திய சேவை, வாழ்வாதார சேவை, நாராயண சேவை செய்யப்பட்டன. பல இடங்களில் முகக் கவசங்கள் தயாரித்து வழங்கப்பட்டன.

மின் ஊடகம் மூலம் அன்பைப் பகிர்ந்து ஒற்றுமையை வளர்த்தோம். மக்களுக்கு வைரஸ் தொற்றைப் பற்றி விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. ஒன்லைன் மூலம் உலகிலுள்ள அன்பர்கள் ஒன்று சேர்ந்து நிகழ்வுகள் நடத்தினார்கள். உதாரணமாக அகண்ட காயத்ரி சாதனை, குருபூர்ணிமா, அகண்ட பஜனை, மகளிர் தினம், சுவாமியின் பிறந்த நாள் விழா ஆகியனவாகும்.

தூய்மையே ஞானம்

சுவாமி எவ்வாறு நம் உள் எதிரிகளான ஆறையும் (காமம்,குரோதம்,மோகம், லோபம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம், மாத்சரியம்) வலுவிழக்கச் செய்யலாமென ஆறு ஆன்மீகச் செயற்பாடுகளைத் தந்துள்ளார்.

அவையாவன:

- ஓம் சாயிராம் என்ற நாமஸ் மரணை. இது என்னேரமும் நாக்கில் இருந்தால் ஜீவன் முக்தி நிலையை அடையலாம்.
- தியானம். சுவாமியின் ரூபத்தில் அல்லது ரூபமற்ற ஒளி பிரேமையில் மனதை நிலை வைத்து தியானிக்கலாம்.
- பஜனை. எங்கே பக்தர்கள் சேர்ந்து பஜனை பாடுகிறார்களோ அங்கே நான் பிரசன்னமாவேன்.
- சேவை. தன்னலமற்ற அன்பு நிறைந்த சேவையின் மூலம் பிறப்பு, இறப்பு புழலில் இருந்து விடுபடலாம்.
- சுவாமியின் லீலைகளை மனதில் எப்போதும் நினைத்தால் எமது இறுதி இலக்கை அடையலாம்.
- சுவாமியின் போதனைகளை விளங்கி வாழ்க்கையில் பின்பற்றினால், ஞானத்தை அடையலாம்.

சாயி சகோதர, சகோதரிகளே, ஒவ்வொரு கணத்தையும் தெய்வீகமான எண்ணம், சொல், செயல் மூலம் புனிதப்படுத்தி பகவான் சத்யசாயி பாபாவின் பொற் கமலப் பாதங்களில் சமர்ப்பிப்போம்.

ஜெய் சாயிராம்!

சாயியின் சேவையில்
டாக்டர் நரேந்திரநாத் ரெட்டி **M.D.**
தலைவர்,
ஸ்ரீசத்ய சாயி சர்வதேச நிறுவனம்.
30.12.2020

என்னோடு பக்கத்தில் வந்தவர் எங்கே?

ஓர் பக்தன் சுவாமியின் அருகாமையையும் அருமையையும் அனுபவிக்கத் தொடங்கினார். அவருடனேயே சுவாமி பக்கத்திலேயே பயணிப்பார்

வாழ்வு என்னும் கடற்கரையில் நடந்து போனார்கள். பக்தன் களைத்துப் போய் மணற்தரையில் ஆறுவதற்காக உட்கார்ந்து, தானும் கடவுளும் சேர்ந்து பயணித்த போது மண்ணில் ஏற்பட்ட அடிச்சுவடிகளை உற்று நோக்கினார்.

அப்போது தனது ஆனந்தக் காலத்தில் இருசோடி அடிச்சுவடுகளும் கஷ்டகாலத்தில் ஒரு சோடி அடிச்சுவடுகளையும் கண்டு கவலையுற்றார்.

ஆண்டவனிடம் கேட்டார். ஆண்டவா ஏன் எனது கஷ்ட காலத்தின் போது கைவிட்டாய். இக்காலத்தில் ஒரு சோடி அடிச்சுவடு தானே தெரிகின்றது. நீங்கள் என்னைக் கைவிட் ர்கள்! இதற்கு பகவான்:

பக்தனே உனது கஷ்ட காலத்தின் போது, உன்னை என் தோள்களில் சுமந்து சென்றேன். அங்கே நீ பார்த்த ஒரு சோடி அடிச்சுவடு என்னுடையதேயாகும்.

பக்தனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்கியது. ஆண்டவன் ஒரு போதும் கைவிட மாட்டார்.

ஜெய் சாயிராம்

ஆன்மீக கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனச் செய்திகள்

கிராம சேவை

- கிராம சேவை 24 கிராமங்களில் நடைபெற்றது. உணவுப் பார்சல்கள் கொடுத்தல், மருத்துவ முகாம்கள், மரநடுகை, குடிநீர் வழங்கல் ஆகியன இடம் பெற்றன.

கோவிட் 19 நிவாரணம்

உலர் உணவுப் பொருட்கள் 5010 குடும்பங்களுக்கு

சமைத்த உணவுப் பார்சல்கள் 1890 குடும்பங்களுக்கு

நாராயண சேவை 2500 நபர்களுக்கு

அறிவுரைகள் 150 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

வீடு - 3 குடும்பங்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டது.

குடிநீர் வசதி

ஆனமடுவவிலும், வவுனியா முதியோர் இல்லத்திலும் அளிக்கப்பட்டது.

மலசலகூடம்:

ஊரெழுவில் இரண்டும், சங்கானையில் ஒன்றும், பருத்தித்துறையில் ஒன்றும் கட்டி வழங்கப்பட்டது.

கண்சத்திரசிகிச்சை

ஹம்பாந்தோட்டையில் 250 பேருக்கும், வவுனியாவில் 155 பேருக்கும் நடைபெற்றது.

முன்பள்ளிகள்

வீரமுனை, காரைதீவு, முல்லைத்தீவு, ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன.

வெள்ள நிவாரணம்

6250 உணவுப் பார்சல்கள் விநியோகம் செய்யப்பட்டன.

உலர் உணவுப் பொருட்கள் 75 குடும்பங்களுக்கு வழங்கப் பட்டன.

யாழ் சாயி நிலையத்தில் தையல் பயிற்சி வகுப்புக்கள் நடை பெறுகின்றன.

மின் ஊடகங்கள் மூலம் பல சத்சங்கங்கள் இடம் பெற்று வருகின்றது,

பிராந்திய செய்திகள்

வட பிராந்தியம்

- கொரோனா பரவலைத் தடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய விதிமுறைகள் செல்வபுரம், இன்பச் சோலை, பாரதிபுரம் மக்களுக்கு விளக்கமளிக் கப்பட்டதுடன் சுகாதார விழி காட்டல்கள் பொது மக்களுக்கு வழங்கப் பட்டதுடன் கை கழுவும் திரவமும் வழங்கப்பட்டது.
- உலர் உணவுப் பொதி வழங்கல்: 719 குடும்பங்கள் அராலி, பரவைக் குளம், அளவெட்டி, சுதந்திரபுரம், பொன்னாலை, உரும்பிராய், வேலணை, கொல்லன்கலட்டி, கைதடி, நுணாவில், இன்பச் சோலை, சுழிபுரம், செல்வபுரம் ஆகிய கிராமங்களிலிருந்து தெரிந் தெடுக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.
- நிலையங்கள் தாங்களாகவே உலர் உணவுப் பொதிகள் வழங்கியு ள்ளார்கள். சங்கானை 26 குடும்பங்கள், மானிப்பாய் 140 குடும்பங்கள், யாழ் மத்தி 75 குடும்பங்கள், பருத்தித்துறை 32 குடும்பங்கள், கோண்டாவில் 30 குடும்பங்கள், கொக்குவில் 50 குடும்பங்கள், யாழ்ப்பாணம் 40 குடும்பங்கள்.
- அன்புத்திரவம் (இரத்த தானம்) வழங்கல்: 9.4.2020 இல் யாழ் மத்திய நிலையத்தில், 16.4.2020 சங்கானை நிலையத்தில், 30.4.2020 இல் சுன்னாகம் நிலையத்தில், 20.9.2020 யாழ்ப்பாண நிலையத்தில் 91 கொடை யாளிகள் இரத்தம் வழங்கினார்கள்.
- சத்துமா வழங்கல்: உரும்பிராய், கொக்குவில் நிலையங்களால் தெரிந்தெடுத்த பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது.
- முகக் கவசம் வழங்கல்: யாழ் மத்தி, உரும்பிராய், மானிப்பாய், சங்கானை நிலையங்களால் முகக் கவசங்கள் தைத்து வழங்கப் பட்டன.
- வடபிராந்திய சாயி இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி தொடர்ந்து 7 வாரங்களாக இடம் பெற்றது. இதில் தொடர்ச்சியாக 35 இளைஞர்கள் பங்கு பற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மயானம் சிரமதானம்
பருத்தித்துறை நிலையம், வடபிராந்தியம்

வீட்டுத்தோட்ட விதை நாற்றுகள் விநியோகம்
தாவடி நிலையம், வடபிராந்தியம்

விசேட தேவையுடைய நபருக்காக அமைக்கப்பட்ட மலசலகூடம் – பருத்தித்துறை – வடபிராந்தியம்

மனநல சிகிச்சை பெறுவோருடனான அன்பான சந்திப்பும், அன்புப் பரிமாற்றமும் – யாழ் நிலையம்

1.1.2021 அன்று பாபா படத்தில் அபயகரத்திலும்,
நிலவிலும் தோன்றிய பேரொளி
மண்டூர் – கிழக்குப்பிராந்தியம்

வீடமைப்பு சேவை பூமிபூஜை
மந்திகை – வடபிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மத்தி சாயி நிலையம்

- வடக்குப் பிராந்தியம் -

முகப்புப் பகுதி

பிரார்த்தனை மண்டபம்

MATHI COLOURS
Mathi, 0212229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org